திராவிடநாடு

2—3—58 | வார வெளியீடு | விலை 16 காசு

குடிகேடி

[பெரி. சிவனடியான் B.A.,]

மறத்தமிழர் எல்லைக்கு வருகின்ற இந்தி
மாய்மாலக் காரியுந்தன் மானத்தைச் சந்தி
நிறுத்திடுமுன் கால்தூக்கி ஓடடிநீ உந்தி
நிலையாகத் தின்றிடவா? வந்தாய்எம் பந்தி
திறல்தாள முத்துநட ராசனுயிர் மூந்தி
தெவிட்டும்வரை குடித்ததெனுச் சிறுக்கிவட மந்தி
அறவீரர் மூட்டுகிறார் அங்கேபார் செந்தீ
அதில்வீழ்ந்து கருகும்வரை நில்லாதே பிந்தி

வடக்குள்ள அதிகார வெறிகாட்ட வந்தாய்
மானமுள்ள தமிழனைக் காவாய்கைப் பந்தாய்
அடக்குமுறை ஆணவத்தை அறியவழி தந்தாய்
அவற்றையெலாம் ஆயிரமாய்க் கண்டவளே எந்தாய்
கடக்கமுடி யாதினியும் கள்ளரிடம் ஓதாய்?
கரந்தூக்கி நினையாதே களங்காண்பாய் தீதாய்
இடங்கண்டு நுழைந்தால்பல் இளிப்பார்கள் தோதாய்
இல்லையடி அஃதிந்தத் தென்னாட்டில் பேதாய்.

தில்லிக்கு நீயரசி செந்தமிழுக்குத் தாசி
சிரந்தாங்கித் திரிவாருன் வடநாட்டு வாசி
வல்லிதமிழ் அல்லியொடு வளர்வாயா பாசி?
வழுக்கிவிழ மாட்டோம்நாம், ஏய்க்காதே பேசி
மல்லிகைக்கே எருக்கலைநீ கூறுவதா ஆசி!
மங்கையரோ உன்பெயரும் கூறார்வாய் கூசி
கொல்லிமலைத் தென்தமிழ்மேல் கொடியபுயல் வீசிக்
குடிகேடி! நீவந்தால் கொளுத்திடுவோம் ஏசி.

'தரிசனமாவது' தந்திருக்கக்கூடாதா!!

இந்தோ சீனக் குடியரசுத் தலைவர் வருகிறார் — பிரிட்டிஷ் பிரதமர்; மாக்மில்லன் வந்தார்— இந்தோனேஷியத் தலைவர் இப்போதுதான் வந்து சென்றார் — என்று ஒவ்வொரு நாளும் யாராவது ஒருவர் வெளிநாட்டிலிருந்து வருகிறார்கள் டில்லிக்கு! வருகிற, ஒவ்வொருவரையும் விமான நிலையத்துக்குப்போய் இந்தியப் பிரதமர் நேரு வரவேற்கத் தவறுவதில்லை—வழியனுப்பவும் தயங்குவதில்லை!! வாரத்துக்கு ஒரு தடவை பஞ்சாபுக்குப் பறக்கிறார் — அஸ்ஸாமுக்கும் ஓடுகிறார் — அடுத்த வாரம் பம்பாய்க்குப் போகிறார் — ஐக்கிய மாகாணத்துக்கு விரைகிறார்-கேரளம் அழைத்தால் வருகிறார் — டில்லியிலிருக்கும்போதோ, ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு இடத்தில் பேசத் தவறுவதில்லை; விழாக்களிலும், வேடிக்கைகளிலும் கலந்து கொள்ள அயர்வதில்லை. ஆச்சரியப்படுகிறார்கள், காண்போர்—எப்படித்தான் இவரால், இப்படிச் சுற்ற முடிகிறதென்று! உள் நாட்டில் மட்டுமல்ல, ஆண்டுக்கு நாலு தடவை, அயல் நாடுகளுக்கும் போகிறார் — அப்படிப்பட்ட நேரு அவர்கள், வாழும் டில்லியில்,

ஒருவன்

செத்தான்

திடீரென்றோ, நோய் வாய்ப்பட்டோ அல்ல,

கொஞ்சங் கொஞ்சமாகச் செத்தான்

உயிர், அணு அணுவாகப் போவது தெரிகிறது.

தெரிந்தும் செத்தான்

வயோதிகனல்ல — வாழ்வின் அரும்பு அவன், மாணவன்

அவன் செத்தான்!!

திமிரல்ல, காரணம்—நேருவின் கவனத்தைக் கவருவதற்காகவே, அந்த மாணவன், உண்ணாவிரதமிருந்து செத்தான்—நேரு அவர்களுக்குப் பேசவும் பறக்கவும், வருவோரை வரவேற்கவும் வாழ்த்தளிக்கவும் நேரம் கிடைக்கிறது. ஆனால், நெஞ்சுச் சுமையையிறக்கி வைத்து நீதி பெறலாமென அண்ணல் காந்தி காட்டிய அறவழியில் முயற்சித்த அவனுக்கு, சாவு கிடைத்தது! பிணமானான், அம்மாணவன்!!

காஷ்மீரை வெட்டிப் பாகிஸ்தான் கையில்கொடு—டாடாவையும் பிர்லாவையும் தூக்கிலே போடு—டில்லியை சென்னை மாகாணத்திலே தூக்கிக்கொண்டு போய் வை—இப்படிக் கோரிக்கைகள் விடுத்தல்ல, அவன் உண்ணாவிரதமிருந்தது! சாதாரணக் கோரிக்கைதான் — முடியும், முடியாது என்று ஒரே வரியில் நேரு சொல்லிவிட முடியும்-எங்கோயிருக்கும் ஐசனோவரையே சமாதான புரிக்கு இழுத்துவரும் நேருவாலா, அந்த மாணவனைத் திருப்திப் படுத்த முடியாமற்போகும்? திவ்ய தரிசனம் தந்து, திருவாய் திறந்து பேசினால்கூட அவனுக்குத்திருப்தி உண்டாக்கியிருக்கமுடியும்! அவன் ஒன்றும் விருதுநகரில் கிடக்கவில்லை—மராட்டியத்தில் பட்டினி இருக்கவில்லை--கல்கத்தாவில் இல்லை—ஒரு 'காலன்' பெட்ரோல் கூடச் செலவில்லாத டில்லி மாநகரில்தான் இருந்தான் — போகவில்லை, நேரு! தான் போகாவிடினும், தற்போது புகழ் பெற்று வரும் தனது மகள் இந்திராவை அனுப்பியிருக்கலாம், அதுவும் முடியாவிடில், ஊழல்களை அம்பலமாக்கி, நாட்டுக்கு நன்மை தேட முயலும் தனது மருமகன் பிரோஸ் காந்தியை அனுப்பியிருக்கலாம்—அதுவும் இல்லையெனில் டில்லி நகர காங்கிரஸ் கமிட்டி மூலம் முயன்றிருக்கலாம் — எதுவும் செய்யவில்லை! அதனால், அந்த மாணவன், பட்டினி கிடந்து கிடந்து, நீதி கிடைக்கும் என எதிர்பார்த்து எதிர்பார்த்து, செத்தான்—பிணமானான்—ஒரு அரும்பு, கருகிற்று — நினைக்கும் போதே நெஞ்சம் துடிக்கும் எவருக்கும்!!

"பிரதமர் அவர்களே! ஏன், நீங்கள் போய்ப் பார்க்கவில்லை. பார்க்காதது போகட்டும்— அந்த மாணவனின் உண்ணாவிரதத்தை நிறுத்த, ஏதாவது முயற்சி செய்தீர்களா?"

பார்லிமெண்டில் உறுப்பினர்கள், இதுபோலச் சரமாரியாகக் கேள்விகள் கேட்டார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தான்! அதற்கு, நேரு அவர்கள் அளித்த பதில் என்ன தெரியுமா? இயலாமையை ஒப்புக்கொண்டிருப்பார்— என்ன செய்வேன், எனக்கு எவ்வளவோ வேலை என்று சொல்லியிருப்பார் என்றே எண்ணத் தோன்றும். எவருக்கும்—நீதியை நிலைநாட்ட, அரசின் பொறுப்பினைக் காப்பாற்ற, டி. டி. கே. போல பாசமுள்ளவர்களைக் கூடத் தியாகம் செய்யும் சீலராயிற்றே அவர்; ஒரு உயிர் போனதுபற்றி உருக்கமாகவே, பதிலளித்திருப்பார் என்றே எவரும் கருதுவர். ஆனால், நேரு அவர்கள், உருக்கமோ, பச்சாத்தாபமோ காட்டவில்லை. நிமிர்ந்து நின்று, கேள்வி கேட்ட உறுப்பினர்களைப் பார்த்து கேலியோடு சொல்லியிருக்கிறார்:-

"உண்ணாவிரதம் கிடப்பேன் என்று சொல்லிக் கொண்டு காரியம் செய்கிறார்களே, இதை நாம் வளர்ப்பதற்கு இல்லை. ஆகவே, இப்படிச் செய்கிறவர்கள், செத்தாலும் சரி, உயிரோடு இருந்தாலும் சரி, அவர்களைப்பற்றி அக்கறை காட்டுவதற்கு நான் தயாராயில்லை."

என்று தீர்த்துச் சொல்லியிருக்கிறார். செத்தாலும் சரி, இருந்தாலும் சரி!—என்று, வேகமாகவே சொல்லியிருக்கிறார்.

"பிறகென்ன! எதற்கெடுத்தாலும், உண்ணாவிரதம் இருப்பேன் என்று சொல்லுவது, பெரிய நியுசென்சாகி விட்டது. இப்படி ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டிருந்தால் முடியுமா? இந்த நியுசென்சுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டாமோ?", என்கிற கேள்வி எழக்கூடும்.

(4-ம் பக்கம் பார்க்க)

சாவுகள்

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [2-3-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 33

அசன்சால் எனுமிடத்தில் சுரங்கம் வெடித்து 200 தொழிலாளர்கள் மாண்டனர்—பதன்கோட் எனுமிடத்தில் இரயில் வாகனிலிருந்து வெடிமருந்துப் பொருள்கள் வெடித்து 40 பேர் பலி—கல்கத்தா அருகில் இரண்டு ரயில்கள் மோதிக்கொண்டு 5 பேர் மரணம்—பெங்களூர் இந்துஸ்தான் விமான பாக்டரி தொழிலாளர்கள்மீது சர்க்கார் சுட்டதால் ஒரு பாட்டாளி பிணமானர்—சென்னை கோடம்பாக்கம் போலீஸ் நிலையத்தில் ஒரு கைதியின் மர்ம மரணம்—இப்படி, இந்தக் கிழமையில், திடுக்கிடும் சாவுகள் பல நிகழ்ந்திருக்கின்றன, இந்திய உபகண்ட முழுவதும்.

சாவு, சாதாரணம்! ஆனல், இந்தச் சாவுகள், சாதாரணமானவையல்ல. வேண்டுமென்றே செத்தவர்களல்ல, இவர்கள். சாகும்படியான நிலைக்குத் துரத்தப்பட்டிருக்கிறார்கள். இப்படிச் செத்தவர்கள் அனைவரும், சீமான்களல்ல; சாதாரண மக்கள்தான். இவர்களது சாவுக்கு, ஏதோ ஒருவிதத்தில், அந்தந்தச் சர்க்கார்களின் திறமைக் குறைவுதான் காரணம் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அசன்சால் கோரமும், பதன்கோட் விபத்தும், பெங்களூர் குண்டுமாரியும், கல்கத்தா இரயில் மோதலும், கோடம்பாக்கம் நிகழ்ச்சியும், சாதாரணம் என்று கருதப்படக் கூடியவை அல்ல; ஒருவர், நாற்பது பேர், இருநூறு பேர் என்று சாகும்படி நேர்ந்திருக்கிறதென்றால், அதற்குள்ள முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும்.

பட்டினி பசி, குடும்ப ஏழ்மை, சொத்துத் தகராறு, இப்படிப் பல காரணங்களுக்காக "ஏழையர் உலகில்", ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சாவுகள் ஏராளம். அவை போதாதென்று, காங்கிரசாட்சியில், அடக்குமுறையின் காரணமாகவும், அலட்சியப் போக்கின் விளைவாகவும் மக்கள் அடிக்கடி சாக நேருகிறதென்றால்,—அப்படி சாகிறவர்களும் ஏழைகள்தான் என்றால்—என்னவென்று சொல்வது! சென்னையில் இரண்டு பேர், நசுங்கியும் தடியடிக்கு ஆளாகியும் மாண்ட பரிதாபம்—இன்னும் பலரது மனதை விட்டு மறைந்திருக்காது!!

வெள்ளையன் காலத்தில் இப்படிச் சாவுகள் ஏற்பட்டிருந்தால், காங்கிரசார், நாட்டையே குமுறச் செய்திருப்பார்கள். ஒரு மாணவன், டில்லியில், உண்ணாவிரதமிருந்தே செத்திருக்கிறான். ஒருவரும் கவனிக்கவில்லை. அந்த அளவுக்கு அலட்சியமும், எதையும் சாதாரணமென நினைக்கும் புத்தியும், இந்தப் பத்தாண்டு கால ஆட்சியிலே காங்கிரசாருக்கு ஏற்பட்டு இப்போது வளர்ந்து போயிருக்கிறது. சட்டசபையில் குறிப்பிடப்பட்டதுபோல, சென்னை அரசின் கைகளில் மட்டுமல்ல, எங்கெங்கு காங்கிரஸ் ஆட்சி இருக்கிறதோ அங்கெல்லாம் அடிக்கடி, "கைகளை இரத்தத்தில் நனைக்கும்" நிகழ்ச்சிகள் நடந்துகொண்டுதான் உள்ளன. அசன்சால், பதன்கோட், கல்கத்தா, பெங்களூர், சென்னை.......அப்பப்ப.......நினைக்கவே நெஞ்சம் கூசுகிறது! 200-க்கு மேற்பட்ட உயிர்கள்!!

★

நமது மாநாடுகள்

சேலம் மாவட்ட மாநாட்டின் சிறப்பினைச் சொல்லி முடிப்பதற்குள், சென்ற சனி ஞாயிறுகளில் "எம்மைப் பாரீர்!" என்று சவால் விடுவதுபோல இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தினர் பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ. தலைமையில், நடிப்புலகில் ஏறுநடை போட்டுவரும் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் துவக்கிவைக்க, தேவகோட்டையில், தமது மாநாட்டினைச் சிறப்பாக நடத்தியிருக்கின்றனர். நாகூர் அனீபா, எம். எஸ். தியாகராசன், சாமி. நடராசன், அல்வா ஆகியோர் இசையும், கலைஞர் கருணாநிதியின் 'உதய சூரியன்' நாடக விருந்தும் இருந்திருக்கிறது. தி. மு. க. தலைவர்கள் எல்லாம் இராமநாதபுர மாவட்டக் கழகத்தினரின் திறமையைக் கண்டு மகிழ்ந்திருக்கின்றனர். இராமநாதபுரம், கழகத்தைப் பொறுத்தவரையில் இன்னும் வளர்ச்சி பெறவேண்டிய மாவட்டம் எனினும், ஆங்காங்கும் தமிழறிந்த புலவர்களும்—மாணவ மணிகளும்—கழகப் பெரியவர்களும் எவ்வளவு முயன்று வருகிறார்கள் என்பது அறிவோம். மற்ற மாவட்டங்களுக்குச் சிறிதும் குறைந்தது அல்ல என்பதைக் காட்டும்

வகையில் இ. ல. மு. சவுந்தரபாண்டியனை வரவேற்புக் குழுத் தலைவராகவும், இராம. வெள்ளையன், மா. குமாரசாமி ஆகிய செயல் வீரர்களைச் செயலாளர்களாகவும் ந. வ. மார்க்கண்டேயன் பொருளாளராகவும் அமைந்த வரவேற்புக் குழுவினர் மாநாட்டினைச் சிறப்பாக நடத்தியிருக்கிறார்கள். நமது தோழர் இராம. வெள்ளையன்மீது காலிகள் எரிச்சல் கொண்டு தாக்குமளவுக்குச் சென்றிருக்கின்றனர் என்றால், வளரும் கழகம் கண்டு, மாற்றார் அடையும் மனமருட்சியின் அளவு நன்றாகப்புரிகிறது! இளைஞர்களும், எழுச்சிமிக்க வாலிபர்களும் நிரம்பிய இராமநாதபுரம் வளர்க, வளர்க என வாழ்த்துகிறோம். மாநாட்டின் பணிகளில், காரைக்குடியில், பயிலும் கல்லூரிக் காளைகளும் மிக்க உற்சாகத்தோடு சேவை செய்தனராம். கேட்ட, இதயம் குளிர்ந்தது. "வளர்க! வாழ்க!!" என்று மனம் பூரித்து, அவர்களை வாழ்த்தும்போதே, மதுரை முத்து அழைப்பு விடுக்கிறார்—மதுரை மாவட்ட மாநாடு, பழனியில், மார்ச் 8, 9-தேதிகளில் என்று. சந்திக்கவாருங்கள், என்று உங்களை அழைக்கவுமா வேண்டும்!!

★

3-ம் பக்கத் தொடர்ச்சி

நிச்சயம், இப்படிப்பட்ட செயல்களுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டியதுதான். உண்ணாவிரதம் இருப்பதும், தான் விரும்பியதைப் பெறத் தன்னையே வேண்டுமென்று சாகடித்துக் கொள்வதும், கொஞ்சமும் நமக்குப் பிடிக்காத செயலாகும். காந்தியடிகள், இந்தப்பாதையைக் கைக்கொண்டபோதே, இதன் காரணமாகத்தான் நாம், பல தடவைகள் கண்டிக்கவும் செய்திருக்கிறோம்.

ஆனால், இப்படி ஒரு மாணவன், உண்ணாவிரதம் கிடந்தது குறித்து இவ்வளவு உறுதியோடு தெரிவிக்கிறாரே நேரு—செத்தாலும் இருந்தாலும் கவலையில்லை; இதுபோல உண்ணாவிரதம் கிடப்பவர்களிடம் எனக்கு வேலையில்லை யென்று—இதே நேரு, என்ன செய்தார் தெரியுமோ? 1956-ம் ஆண்டு, ஆமதாபாத்தில் கலவரமும் துப்பாக்கிப் பிரயோகமும் ஏற்பட்டுப் பலர் செத்தார்கள்! இப்போது டில்லி வர்த்தக மந்திரியாக யிருப்பவரும், அப்போது பம்பாய் முதலமைச்சராகவும் இருந்தவருமான **மொரார்ஜிதேசாய்** என்பவருக்கு இழிவும் பழியும் ஏற்பட்டது!! ஒரு பக்கம் மராட்டிய மக்கள் கிளர்ச்சி—இன்னொரு பக்கம் குஜராத்தியர் குமுறல்—இந்நிலையில், தான் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக, நேருவுக்கும் காங்கிரஸ் தலைமைப்பீடத்துக்கும் அறிவித்தார் மொரார்ஜி தேசாய். உடனே நேரு, "சே! சே!! இப்படிஉண்ணாவிரதம் இருப்பவர்கள், செத்தாலும் சரி, இருந்தாலும் சரி எனக்குக்கவலையில்லை. எதற்காக உண்ணாவிரதம் இருப்பது? இது நல்லதல்லவே!!", என்று தானே தந்தி அடித்திருக்கவேண்டும்.

செத்தவன், ஒரு மாணவன் என்றதும், "சேச்சே...!", என் கிற பதில் வருகிறது.

பட்டினி கிடக்க முடிவு செய்தவர் மொரார்ஜிதேசாய் என்றதும், பண்டித நேரு என்ன செய்தார் தெரியுமா? காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டைக் கூட்டினார்! அவர்கள்கையெழுத்தோடு, தந்தியொன்றை அனுப்பிவைத்தார். உண்ணாவிரதம் இருக்க வேண்டாம் — பலமிக்க தலைவர்கள் நாங்களிருக்கும்போது என்ன கவலை — உண்ணாவிரதம், ஒரு கெடுதல் — என்றல்ல; தந்தி அனுப்பியது.

"மொரார்ஜி அவர்களே!

உங்கள் முடிவை மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். உண்ணாவிரதமிருக்கிறேன் என்கிற தங்கள் முடிவு, இந்தியாவுக்கு மட்டுமல்ல, குஜராத்துக்கும் மராட்டியத்துக்கும் பம்பாய்க்கும் மிக மிக நல்லது.'

திகைக்காதீர்கள்! இப்படித் தந்தி கொடுத்த நேருதான், இப்போது, இவ்விதம் பதிலளிக்கிறார்!!

நேருவா? — என்று சிலர், அதிர்ச்சியடையக்கூடும்.

நேருதான்!—என்று, செய்தி, கூறுகிறது.

★

நல்லவர், மறைவு

மாற்றுக்கட்சியினர்கூட மரியாதையும் அன்பும் செலுத்துமளவுக்கு ஒப்புயர்வற்றவராக விளங்கிய மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள், திடீரென இயற்கை எய்திய செய்தி, உலகையே அனுதாபம் காட்டச் செய்திருக்கிறது. வீண் சிக்கல்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாமலும், தனதுகாரியாலய மூலம் வேலைகளைக் கவனிப்பதிலும், எல்லோருடனும் சுமுகமாகப் பழகுவதிலும் மிகமிகப் பெயர் பெற்ற பெரியவர் அவர். அவரது மறைவு, இந்திய உபகண்டத்திற்கு, உண்மையில் சொல்லொணா இழப்பாகும். ஒரு நல்லவர் போய்விட்டாரே, என்று நாமும் துயரடைகிறோம். நமது மரியாதைகளைச் செலுத்துகிறோம்.

●

உபயதுல்லா

வேலூர் காங்கிரஸ் பிரமுகர் உபயதுல்லா, கடந்த கிழமை காலமான செய்தி, வருந்தவேண்டிய ஒன்றாகும். அவருடைய நாவன்மையும், எதிர்க் கட்சிகளைத் தாக்கும் சொல்லடுக்கும், தமிழகம் அறிந்த ஒன்றாகும். காங்கிரஸ்காரர் எனினும், தான் மனதிலேற்றுக் கொண்ட கொள்கையில் அவர் கொண்டிருந்த உறுதியும் ஆர்வமும் எவரையும் வசீகரிப்பதாகும். அத்தகையவரின், குடும்பத்தாருக்கு, நமது ஆழ்ந்த—அனுதாபங்கள்.

வடிவுக்கு வாய்த்த மணாளன்!

ப. வாணன்

இப்படி இலட்சுமியின் அங்க அவையவங்களை யார் யாருடனேயல்லாம் ஒத்திட்டுப்பார்த்து மகிழ்ந்தான் கந்தசாமி. "அந்தத் தேவராச முதலியாருக்குத்தான் என்ன பிடிவாதம்? வைதீகத்திலே அவ்வளவு மோகம்" என்று திடீரென்று கோபம் வரும். மறுவிநாடியே "சீர்திருத்தத்தைப் பற்றி நினைப்பதே பாபமாக இருந்தது ஒரு காலத்திலே. இப்போது தைரியமாகப் பேசுகிறோம், எழுதுகிறோம். அதுவே புரட்சிதான், சார். இன்னும் சில ஆண்டுகள் சென்றால்தான் செயலில் சீர்திருத்தம் செய்ய முடியும்!" என்று தான் வைதீகச் சடங்குகள் செய்வதற்கு காரணம் கூறுவதைப் பல பேர் வாயிலாக கேட்டிருக்கிறான் கந்தசாமி. அப்பொழுது அவர்களை யெல்லாம் 'கோழைகள்' என்று ஒரே வார்த்தையில் ஒதுக்கித் தள்ளிவிடுவான். இன்று அவனே கோழையாகிக் கொண்டிருந்தான்.

"பொம்மைக் கல்யாணமா என்று கேட்கிறீர்களே, சார். மேலை நாடுகளில் பெண்களை ஆண்கள் பல பொது இடங்களில் எந்த நேரத்திலும் சந்திக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே ஆடவனொருவன் தனக்கேற்ற பெண்ணை மனையாளாகத் தேர்ந்தெடுக்க முடிகிறது. இங்கு அந்த வசதி ஏது? ஆகவே இன்னும் பல ஆண்டுகளுக்குப் பெற்றோர்கள் தான் திருமணங்களை முடித்து வைக்கவேண்டும்!" என்று அவனிடம் வாதாடிய மிதவாதிகள் உண்டு. இப்படிப் பலர் கூறியதும் ஓரளவு உண்மையென்றே பட்டது கந்தசாமிக்கு. இப்படி எண்ணம் வளர, வளர கழகக் கட்டிடத்திற்கு போவதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டே வந்து கடைசியாக, போவதை அறவே நிறுத்திவிட்டான்.

இதற்கிடையில் பரீட்சை வந்து போனது. நன்றாகவே எழுதிவிட்டு வந்தான். இனிமேல் இலட்சுமியைப் பற்றி நினைப்பதைத் தவிர அவனால் வேறெதுவும் செய்ய முடியவில்லை. "வேலை கிடைக்கு முன் திருமணமா? தாங்களாகவே தேவையான அளவு சம்பாதிக்க வழி கிடைக்காதவரை திருமணம் செய்துகொள்வது தவறு" என்று கழகக் கட்டிடத்திலே நடந்த விவாதங்களில் பல தடவை கூறி இருக்கிறான். அவைகள் எதுவும் அவன் மனதிலே இப்போது இல்லை. "வேலை கிடைக்க ஒரு ஆறுமாதகாலம். ஆனால் அதுவரை நம்மைக் காப்பாற்ற ஒரே பெண்ணோடு அவ்வளவு சொத்தை வைத்திருக்கும் தேவராசரால் முடியாதா?" என்று தோன்றியது.

எப்படியும் அவளை அடைந்தே தீருவது என்ற ஒரே நோக்கத்துடன் "எந்தச் சடங்கு வேண்டுமானாலும் நடத்தட்டும், பரவாயில்லை!" என்று கூறினான் ஜாடையாக தன் தாயிடம்! உருக்குமணி அம்மாளுக்கு வந்த மகிழ்ச்சிக்கு அளவு உண்டா?

"இந்தாங்க, ஏதோ நல்ல காலம் பிறக்குது போலிருக்கு. பையனுக்கு இந்தப் பெண்ணை பிடிச்சிருக்கு. பார்த்து முடித்துவிடுங்கோ" என்றாள்.

அந்த நேரத்திலே சோமசுந்தரம் திருமணப் பேச்சை எடுக்கத் தயாராயில்லை. "மண்டு மாதிரி அவசரப்படாதே! இன்னும் ஒரு மாதத்திலே எனக்குப் பரமோஷன் ஆகும் போலிருக்கு. அதற்குள் பையனுக்கும் ரிசல்ட் வந்திடும். பி. ஏ. மாப்பிள்ளை என்றால் அப்பொழுது கல்யாண மார்க்கெட் எப்படி இருக்குமோ பார்க்கலாம்" என்றார்.

அவர் எதிர்பார்த்தபடியே ஒரு மாதத்திற்கெல்லாம் சோமசுந்தரம் கருவேலம்பட்டி கோவிலுக்கு மேலதிகாரியாக நியமிக்கப்பட்டார். திடீரென்று சம்பளத்தில் நூறு ரூபாய் உயர்ந்த மகிழ்ச்சியில் திளைத்தார் அவர். "உருக்கு! இனிமேல் ஒரு கஷ்ட காலமும் நமக்குக் கிடையாது. முதலில் நான் போய் வீடு பார்த்து ஏற்பாடு செய்துவிட்டுக் கடிதம் எழுதுகிறேன். நீ குழந்தைகளை அழைத்துக்கொண்டு வந்துவிடு!" என்று கூறிவிட்டு முன்னால் புறப்பட்டுப் போய்விட்டார் அவர்.

தான் வெளிப்படையாகச் சம்மதம் தெரிவித்தும் இன்னும் திருமணத்தை நிச்சயம் செய்யாததைக் கண்டு வருத்தமடைந்திருந்த கந்தசாமியின் கையிலா அந்தக் கடிதம் கிடைக்க வேண்டும்? தான் உடல் நலமின்றி டாக்டர் சுந்தரேசன் நர்ஸிங் ஹோமில் படுத்திருப்பதாயும், முடிந்தால் வந்து பார்த்துப் போகும்படியும் எழுதி இருந்தார் திருவாரூர் தேவராச முதலியார். அவர் எப்பொழுது சென்னை வந்தார் என்று

விளங்காமல் அந்தக்கார்டை எழுதியது நிச்சயமாக இலட்சுமிதான் என்று கையெழுத்திலிருந்து யூகித்த கந்தசாமி டாக்டர் சுந்தரேசன் மருத்துவ நிலையம் புறப்பட்டான். அப்பா இல்லாத நேரத்தில் இந்த வேலையை அவன்தானே செய்யவேண்டும்? ஒருவேளை அவர் இருந்திருந்தால் போகமாட்டாரோ என்னவோ? இப்படி யோசித்துக் கொண்டிருக்கும்போது அவன் தாயார் "என்னடா, கார்டு?' என்று கூறிக் கொண்டே வந்தாள்.

ஏதோ, அவனையுமறியாமலே, "இதுவா...இது என் நண்பன் எழுதியது!" என்று கூறிக் கொண்டே வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

போகிற வழியிலே ஏதாவது பிள்ளையார் கோவில் தெரிகிறதா என்று பார்த்துக்கொண்டே போனான். கடைசியிலே டாக்டர் வீட்டுக்கருகிலே ரிக்ஷா ஸ்டாண்டு பிள்ளையார் கோவில் ஒன்று இருந்தது. அதனருகில் திருநீற்று மடல் ஒன்று இருந்தது. அதில் கொஞ்சம் எடுத்து நன்ருகத் தெரிகிறமாதிரியும், ஆனால் அதே நேரத்தில் நாகரீகமாகவும் பூசிக் கொண்டு டாக்டர் வீட்டிற்குள் நுழைந்துவிட்டான்!

16-ம் நெம்பர் அறையிலே தேவராசர் குடும்பம் தங்கி இருக்கிறது என்று அறிந்துகொண்டு உள்ளே போனான். அறைக்குள்ளே தேவராசர் படுத்திருந்தார். அவர் முகம் வாடி இருந்தது. கண்மூடி இருந்தது. கந்தசாமி உள்ளே வருவதைக் கண்டதும் பக்கத்தில் அமர்ந்திருந்த பார்வதி அம்மாளும் இலட்சுமியும் எழுந்தனர்.

"நீங்கள் எப்போது இங்கு வந்தீர்கள்? ஐயா உடம்புக்கு என்ன நோய்?" என்று அவன் கேட்டுக் கொண்டிருக்கும்போதே "உஸ்......!" என்று கூறிக் கொண்டே அறையை விட்டு வெளியே வந்தாள் இலட்சுமி. அவள் பின்னே அவள் தாயும் வந்தாள்.

"களைப்பா வருகிறதென்று போன புதன்கிழமை படுத்தார்கள். பிறகு எழுந்திருக்கவே இல்லை. என்னமோ இரத்தக் கொதிப்பாம்! என்றாள் பார்வதி அம்மாள்.

"இரத்தக் கொதிப்பா? அட ஆண்டவனே! நல்லா இருந்த குடும்பத்திற்கு இப்படி ஒரு சோதனையா? எல்லாம் நம்ம தலைவிதி!" என்று துணிச்சலாகதான் மனப்பாடம் செய்து வந்திருந்த சில வரிகளைக் கூறினான், கந்தசாமி. உள்ளேயிருந்து வந்த இருமல் சப்தம் உடனே பார்வதி அம்மாளை அந்த இடத்தைவிட்டு அகற்றியது, வெளியே தனியாக இலட்சுமியும் கந்தசாமியும் விடப்பட்டனர்.

"ஆறுமாதமா ஹோட்டலில் நஷ்டம். பத்தாயிரம் முதலைப் போட்டது மல்லாமல் பத்தாயிரம் கடன்வேறு ஏறிவிட்டது. கடைசியாக அந்த தீக்ஷதரே ஹோட்டலை எடுத்துக்கொண்டு ஐயாயிரம் ரூபாய்தான் கொடுத்தான். அதுதான் அப்பாவின் வியாதிக்குக் காரணம்!" என்று அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவனைப் பார்த்துக் கூறினாள் இலட்சுமி.

"அதுதானே யோசித்தேன். திடீரென்று அவருக்கு ஏன் இப்படி நேர்ந்தது என்று?"

"எதற்கு யோசிப்பது? அதுதான் 'விதி' என்று கூறிவிட்டீர்களே, ஆமாம்...இந்தவிதி வீபூதிப்பட்டை இதெல்லாம் எத்தனை நாட்களாய்? என்று அதட்டிக் கேட்டாள் இலட்சுமி.

கந்தசாமி திகைத்துப்போய் "இதுவா, இலட்சுமி...!" என்று உளற ஆரம்பித்தான். அதற்குள் "என்னை 'இலட்சுமி' என்று அன்பு கூர்ந்து அழைக்கவேண்டாம். என் பெயரை வடிவழகி என்று மாற்றிக்கொண்டு ஆறுமாதமாகிறது!" என்றாள் இலட்சுமி.

கந்தசாமிக்கு என்ன கூறுவது என்று தெரியவில்லை.

"வடிவழகியா...?"

"ஆமாம்! திருவாரூர் தேர் உற்சவத்தில் ஆகும் தேசிய உழைப்பின் விரயத்தைக் கண்டித்துப் போனவாரம் "சீர்திருத்தம்" பத்திரிகையிலே கட்டுரை எழுதி இருந்தேனே, நீங்கள் படிக்கவில்லையா?"

"நான் சீர்திருத்தத்தை தொட்டே ஆறுமாதமாகிறது!"

"காரணம்......?"

"காரணமா? கண்ணே! நான் காரணம் கூறவேண்டுமா? இந்த வடிவழகி இன்னும் 'இலட்சுமி' யாகவே இருக்கிறாள் என்று நினைத்து என்னை நானே மாற்றிக் கொண்டேன்!"

"இல்லை......இனி ஒரு நாளும் இலட்சுமி ஆகமாட்டாள்; முதலில் அந்தப் பட்டையைக் கலையுங்கள். சகிக்கலை......"

"நீயே கலைத்துவிடு. உன்னால் வந்த மாசுதானே அது, வடிவு!"

"உங்களுக்கு இருந்த கருத்துக் குழப்பத்தை காண்பிக்கிறது!" என்றுக் கூறிக்கொண்டே அவன் வேஷத்தைக் கலைத்தாள் வடிவு. அவள் கைபட்ட மாத்திரத்திலே தேவலோக யாத்திரை செய்ய ஆரம்பித்தான் கந்தசாமி.

"கந்தசாமி, கரிகாலன் ஆகிவிட்டேன் வடிவு!"

"கரிகாற் பெருவளவனை மறந்த தமிழர் யார்?"

"கண்ணே......!"

"அன்பரே...!"

மேலே குறிப்பிட்ட சம்பாஷணை ஒரே நாளில் நடக்கவில்லை. ஒரு வாரத்தில் நடந்ததன் குறுகிய பகுதிதான் இது! வடிவழகியின் அரவணைப்பிலே கருத்துத் தெளிவு பெற்று ஒரு வாரத்திற்கெல்லாம் கந்தசாமி பழையபடி கரிகாலனாகிக் காதலனுமாகி விட்டான்.

உடல் நலமான தேவராசர் திருவாரூருக்குப் பயணமானார். "கொவ்வை இதழை மறந்து நானெப்படி இருப்பேன், கண்மணி!" என்று கரிகாலன் கேட்

சிரியா பார்லிமெண்டில்

"ஐக்கிய அராபிய குடியரசு என்கிற புனிதமான தர்ம பரிபாலனத்தை நான் எனது சந்ததியாரிடம் ஒப்படைக்கிறேன். அந்த இலட்சிய தீப விளக்கை கையிலேந்தி உள்ளத்திலே நம்பிக்கை பூண்டு முன்னேற வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்," என்று சிரியா நாட்டின் தலைவர் குவாட்லீ, சிரியா பார்லிமெண்டில் தெரிவித்தாராம். எகிப்தும், சிரியாவும் ஒன்ருக இணைந்துவிட்ட அதிகாரபூர்வமான தகவலை அறிவித்தபோதே, இந்த ஆசையை வெளியிட்டிருக்கிறார், அவர். வருங்காலத்துக்கு வரவேற்பு அளிக்கும் வகையில், முதுபெரும் கிழவரான அவர் விடுத்த இந்த அறிவுரை, பலராலும் சிரியாவில், பாராட்டப் பட்டதாம்.

கவும் "விதியை நினைத்துக் கொண்டு இருங்கள்!" என்று அவள் குறும்போடு பதில் கூறவும் பிரியா விடைபெற்றுச் சென்றாள் வடிவழகி. "ஊருக்குப்போய் அப்பாவைக் கடிதம் எழுதச்சொல்கிறேன்" என்று அவள் கூறிச் சென்றபடி அடுத்த வாரமே தேவராசரிடமிருந்து கடிதம் வந்தது. குழந்தைகள் விருப்பப்படி எப்படி வேண்டுமானாலும் திருமணம் செய்துவிடலாம் என்று எழுதி இருந்தார். தீக்ஷிதர் கூட்டிலே அவரடைந்த நஷ்டம் அவரையும் சீர்திருத்தவாதியாகிவிட்டது! என் வீட்டில் நடக்கும் திருமணத்தைப்பற்றி எவன் கேள்வி கேட்பது (?) என்று ஒரே பேச்சில் கூறிவிட்டார். வடிவுக்குப்பரமானந்தம்! இன்னும் இரண்டொரு நாட்களில் திருமணம் நிச்சயம் ஆகிவிடும் என்று உள்ளக்களிப்போடு இன்பக் கனவு கண்டுகொண்டிருந்தாள்.

சென்னையிலேயிருந்து கருவேலம்பட்டிக்குக் குடியேறிய சோமசுந்தரத்தின் குடும்பத்திலே இக்கடிதம் புதியதொரு புயலைக் கிளப்பிவிட்டது.

"அடுத்த மாதத்திற்குள் உனக்கு ஒரு வேலை கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். அதற்குப் பின் உன் திருமணத்தைப்பற்றி யோசிக்கலாம்!" என்றார் சோமசுந்தரம், கரிகாலனிடம்.

"அவன் கடன்பட்ட நிலையில் இருக்கிறான். கொஞ்சம் பொறுத்துக்கொள். அடுத்த மாதம் ஒரு வேலையும் ஆகிவிட்டால் உன் பையனைத் தேடி இலட்சம் பணக்காரன்கள் ஓடி வருவார்கள், பெண் கொடுக்க!" என்றார் தன் மனைவியிடம்.

ஆனால் உண்மையிலே அவர் எண்ணம் சென்ற வாரம் கோயில் மேலதிகாரிகளுக்கு சென்னை அரசாங்கம் அனுப்பிய அறிக்கையின் மேல்தானிருந்தது.

"சாமி இல்லை; பூதம் இல்லை என்று விதண்டாவாதம் பேசும் கட்சிகள் நாட்டிலே வளர்ந்துகொண்டு வருகிறது. ஆகவே, கோவிலைச் சுத்தமாக்கி மக்களை பக்தி மார்க்கத்திலே திருப்பும் பெரும்பணியிலே கோவில் மேலதிகாரிகள் ஈடுபடவேண்டும். நகரின் முக்கிய பக்தர்களோடு தொடர்பு கொள்ள வேண்டும். இந்த விஷயமாகச் சமீபத்தில் சட்ட சபையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளையும் மந்திரி அவர்கள் அளித்த பதிலையும் இத்தோடு அனுப்புகிறோம். ஹிந்து மத பரிபாலன இலாகாவில் தொடர்பு கொண்டவர்கள் அதன் நற்பெயரையும், அதனை நிறுவியதின் நோக்கத்தையும் நன்கு உணர்ந்து நடந்துகொள்ள வேண்டப்படுகிறார்கள்." என்று அந்த அறிக்கையிலே கூறப்பட்டிருந்த விஷயங்கள்தான் அவர் மனதிலே திரும்பத் திரும்ப வந்தது. இந்த அறிக்கையை வைத்துக்கொண்டு அவர் சீர்திருத்தத் திருமணமா நடத்த முடியும்? அப்படிச் செய்துவிட்டு வேலையில்தான் இருக்க முடியுமா?

எந்தத் திருமணச் சடங்குகளிலும் அவருக்கு நம்பிக்கை கிடையாதுதான். ஆனால் பார்ப்பது கோயில் அதிகாரி உத்தியோகமில்லையா? நாளைக்கு நாலுபேர் ஊரிலே என்ன சொல்வார்கள்? எதையும் செய்யத்தைரியமில்லாத நிலையில் பிரச்னையை ஒத்திப் போட்டார். மகனிடம் ஜாடையாகப் பேசிக்கூடப் பார்த்தார். அவன் எதுவும் அசைவதாயில்லை. முன்னைவிட இப்போது தெளிவாக இருந்தான். வடிவு கொடுத்த 'டானிக்கின் பலன் இதுவென்று அவருக்கு எப்படித் தெரியும்? மனக்கலக்கத்துடனேயே வருங்காலத்தை நோக்கிக்கொண்டிருந்தார்.

செக்ரடரியேட்டிலே குமஸ்தா வேலை கிடைத்தது, கரிகாலனுக்கு. தனியாகச் சென்னைக்கு வந்த கரிகாலன் காலையும் மாலையும் கடற்கரையில் நடக்கும் போதெல்லாம் அந்த வெண்மணற் பரப்பிலே, வடிவழகி உட்கார்ந்திருக்க, தான் அவள் மடியிலே தலையை வைத்துப் படுத்து உச்சி நோக்கி வானத்தைப் பார்த்து அங்கே இருக்கும் முழுநிலவை இரசித்து, அதன் பிறகு அருகில் தோன்றும் களங்கமற்ற அவள் முகத்தைப் பார்த்து நிலவைவிட அவள் முகப் பொலிவே மேல் என்று எண்ணி, அந்த இன்ப முகத்தை இரு கைகளாலும் இழுத்து இதழோடு இதழ் ஒற்றும் நாள் என்னாளோ என்று ஏங்கிக்கொண்டிருந்தான்.

ஒரு மாதமாகியும் ஒரு கடிதமும் வராமற்போகவே, துணிச்சலாக திருவாரூருக்கே ஒரு கடிதம் எழுதினான். அவன் கடிதத்தை எதிர்பார்த்ததுதானே அந்த ஆரணங்கும் துடித்துக்கிடந்தாள்.

அவள் எழுதிய பதிலிலேதான் அவன் தந்தை செய்த சூட்சமம் தெரிந்தது. "யார் எதைச் சொன்னாலும் இனி என் வடிவு எனக்குத்தான்!" என்று முடிவு செய்துவிட்டான் கரிகாலன், அதற்கு ஒரே வழிதான்...அதைச் செய்ய இருவரும் துணிந்துவிட்டனர்.

கோவிலுக்கு மதிற்சுவர்கள் பழுது 'பார்க்கும் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. மேற்பார்வை பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்த சோமசுந்தரத்திடம் ஒரு கவரைக் கொடுத்தாள் உருக்மணி அம்மாள்.

"பட்டணத்திலே இருந்து வந்திருக்கு போலிருக்கு. பையன் கையெழுத்தாயிருக்கு..." என்று அவள் கூறிக்கொண்டிருக்கும் போதே சோமசுந்தரம் கடிதத்தை பிரித்து படிக்க ஆரம்பித்தார்.

"...நான் தங்களை மீறி இதைச் செய்கிறேன் என்று தயவு செய்து என்மீது கோபிக்காதீர்கள். தங்களுடைய நல்ல பெயருக்கு இழுக்குத் தேடித் தருகிறோமே என்று எங்களுக்குக்கூட வருத்தமாகத் தானிருக்கிறது. ஆனால் உலகத்திற்குப்பயந்து இன்னும் எத்தனை ஆண்டுகள்தான் வாழப் போகிறோம். வருங்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்கி, இன்று காலை நாங்களிருவரும் கழகக் கட்டடத்திலே திருமணம் செய்துகொண்டிருக்கிறோம். சென்னையில் நாங்கள் தங்கி இருக்கும் முகவரி மேலே இருக்கிறது. எந்த நேரத்திலும் பெற்றோர்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையோடு உங்களுக்கு வரவேற்புக் கிடைக்கும்.

வானத்திலே பறக்க ஆரம்பித்துவிட்ட பறவைகள் நாங்கள். எங்கள் சிறகை வெட்டும் பணியில் தயவு செய்து இறங்காதீர்கள். உங்கள் ஆசியைக் கோரும் கரிகாலன்— வடிவழகி (பழைய லட்சுமி)"

இக்கடிதத்தின் நகல் தேவராசருக்கும் அனுப்பி இருக்கிறதாக அடியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கடிதத்தை மடித்து உறையில் போட்டார், சோமசுந்தரம். அவர் கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் விழுந்தன. அது ஆனந்தக் கண்ணீரா? ★

கேரளத்தில் விடிவெள்ளி!

"பாரத நாட்டில் மற்றொரு பிரிவினையை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கமாட்டோம்" என்று பண்டிதர் முழக்கமிட,

கடைசிக் காங்கிரஸ்காரன் உயிரோடிருக்கும் வரை திராவிட நாட்டைப் பிரிப்பதென்பது இயலாத காரியம் என்று அவருக்கே உரித்தான கொச்சை மொழியில், காமராசர் மார்தட்டிப் பேசிட,

"திராவிடநாடு" தேவையா, இயலுமா, அப்படியே இயன்று நாம் பிரிந்தாலும், அதனாலே இலாபமுண்டா என்று மூன்று வினாக்களைத்தானே எழுப்பி, எதற்கும் உருப்படியான பதில் சொல்லிட இயலாமல் நமது நிதியமைச்சர் சுப்ரமணியம் தவித்திட,

இத்தகு நிகழ்ச்சிகளை நாடே கண்டு நகைத்திடும் நிலையினை நாம் காண்கிறோம்.

"உங்களோடு நானும் சேர்கிறேன்! தயைகூர்ந்து என்னையும் உம் வரிசையில் சேர்த்திடுங்கள்" என்று வாதிடும் வகையில், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. கே. கோபாலன் அவர்கள் "ஆந்திரமும், கேரளமும், கன்னடமும் உங்கள் பிரிவினையை ஒப்புக்கொள்ளாதபோது திராவிட நாட்டுப் பிரச்சினைக்கு இடமெங்கே?" என்று தன் அங்கலாய்ப்பை வெளியிடுகிறார்!

அவர்களுக்கு நாம் தரும் பதிலெல்லாம், கேரளமும், ஆந்திரமும், கன்னடமும், இதுவரை ஒப்புதல் அளித்திடவில்லை என்பது உண்மைதான்!

ஆனால், "ஒப்பவில்லை" என்றாலே "மறுத்துவிட்டன" என்று பொருளல்லவே!

திராவிடநாடு பிரிவினையை அவர்கள் ஒப்பாமலும், மறுத்திடாமலும் இருப்பதற்குக் காரணம், இதுவரை தி. மு. கழகத்தின் குரல் அவர்களுக்கு எட்டவில்லை.

திராவிடநாடு பிரியவேண்டும் என்னும் கொள்கை அந்தப்பகுதிகளிலெல்லாம் பரவவில்லையே தவிர, அந்தக் கொள்கையை எந்தெந்த அடிப்படைகளில் கழகம் வகுத்திருக்கிறதோ அந்த அடிப்படைகளெல்லாம், அவைகளாலே ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றன —தருணம் வாய்த்திட்ட போதெல்லாம்!

தமிழரும் தெலுங்கரும், கேரளத்தாரும் கன்னடத்தாரும், ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்கிறோம், நாம்—வரலாற்று ஆதாரத்தைக் கொண்டு! ஆமாம் என்றிருக்கின்றனர், அத்தனை மாநிலத்தைச் சேர்ந்த நல்லறிவாளர்களும்!

M. S. வெங்கடாசலம், M. A.

ஆலைகள் ஆயிரம் வடக்கே—யாரும், இதுவரை மறுத்திடவில்லை!

தெற்கு வஞ்சிக்கப்படுகிறது. தென்னாட்டு மாநிலங்களின் தொழில்வளம் பெருக்கிடப்படவில்லை—குறிப்பிட்ட பிரச்சினைகள் வரும்போது, ஒவ்வொரு மாநிலத்திலும், இத்தகைய எண்ணம் தோன்றிக்கொண்டுதான் இருக்கிறது. அதனையும் யாரும் மறைத்திட முடியாது!

ஆனால் அந்த மாநிலங்களில் உள்ளவர்கள் பிரச்சினைகளை நோக்குவதற்கும், நாம் நோக்குவதற்கும் உள்ள வேறுபாடு, இத்தகு கேடுபாடுகளைக் களைவதற்கான வழி இது என்று நாம் வரையறுத்துச் சொல்லுகின்றோம் — அவர்கள் சொல்லவில்லை — இதுவரை!!

இதுவரை சொல்லவில்லை என்பதிலிருந்து இனியும் சொல்லமாட்டார்கள் என்று கணக்கிடுவது, அரசியல் அறிவுடைமை என்று நம்மாலே கருதிட இயலவில்லை.

நோய்வாய்ப்பட்டவன் மருத்துவனையும் மருந்தையும் நாடிச் செல்வது இயற்கை.

நோய் கண்ணுக்குப் புலனாவதாக இருந்தால், மருத்துவனை நாடிடும் செயல் விரைவில் நிகழும் —உள்ளூர அரித்திடும் நோயாக இருப்பின் சற்று நாளாகும்! அவ்வளவு தானேயொழிய, அவன் என்றுமே மருத்துவனை நாடமாட்டான் என்று கருதிட முடியாது.

அடிமைத்தளை என்பது அத்தகையதொரு நோய்! திராவிடத்திற்கு அந்த நோய் பீடிக்கப்பட்டிருப்பதனை முதன் முதலில் கண்டு பிடித்திருப்பது தமிழகம்—அதன் பயனாக உருவாயிருப்பதுதான் திராவிட முன்னேற்றக்கழகத்தின் விடுதலைப் போராட்டம்!

அந்த நோய் பீடிக்கப்பட்டிருப்பதை, ஆந்திரமும், கேரளமும், கன்னடமும், உணரவில்லையே தவிர, அதன் அறிகுறிகளை அவை உணர்ந்துதான் வருகின்றன என்பதற்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு:—

"ராஜாஜி இந்தியாவினுடைய ஒற்றுமைக்கு எதிரி என்று சத்திய நாராயண ராஜு கண்டுபிடித்திருக்கிறார். நீர்மோர் சாப்பிடுவதைப்போல், இந்தியைக் குடித்து, வட இந்திய எஜமானர்களின் உத்தரவுகளுக்கு 'ஆமாம்' போட்டிடாத இவரைத் தாக்குவதன்மூலம், ராஜு, தனது எஜமான விசுவாசத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறார்."

தி. மு. க. ஏடு எதிலும் எழுதப்பட்டிருக்கிற வாசகங்களல்ல இவை!

"நர்மதா" என்னும் மலையாள மாத இதழின், தலையங்கத்தில் தரப்பட்டிருக்கிற கருத்து இது!

இராகவன் நாயர் என்பவரை ஆசிரியராகக் கொண்ட இந்த இதழ் நமக்கே வியப்பூட்டும் வகையில் வெளிப்படையாகத் தனது கருத்தைத் தெரிவித்தது கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

அந்த வாசகங்களில் நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவு எங்கே இருக்கிறது, என்று கேட்கிடத் தோன்றும், 'அகில இந்தியா'க்களுக்கு!

"வட இந்திய எஜமானர்கள்"

"ராஜு"வின் எஜமான விசுவாசம்"

வட இந்தியா "எஜமானன்" என்றால் தென்னிந்தியா — திராவிடம்—என்ன?

வாசகங்களை மட்டுமே வைத்துப் பார்த்தாலே, ஆள்வது வடக்கு, ஆளப்படுவது தெற்கு என்று கருத்துக் குருடர்கள் தவிர, எவருக்கும் புரிந்திடக் கூடிய அளவு, தனது உணர்ச்சியை—திராவிடம் அடிமைப்பட்டிருக்கிறது என்ற உண்மையை—வெளிப்படுத்தியிருக்கிறது அந்த இதழ்!

மனிதன் உண்பதற்கு முன்னாலே அவனுக்குப் பசி தோன்ற வேண்டும்!

மருத்துவனை நாடுவதற்கு முன்னால், நோய் ஏற்பட்டிருப்பதை அவன் உணரவேண்டும்!

அதுபோல் ஒரு நாடு விடுதலை பெறவும், அந்த நாடு முதலில் தான் அடிமைத்தளையில் சிக்குண்டிருப்பதை உணரவேண்டும்! அடிமைத் தளையிலிருந்து விடுபடுவதற்கு அதுவே முதற்படி!

அந்த முதற்படியில் கேரளம் இன்று காலடி எடுத்துவைத்திருக்கிறது என்பதற்கு இந்த இதழ் தருகின்ற கருத்தைவிட வேறென்ன சாட்சி வேண்டும்?

ஆனால் அந்த இதழ் முதற்படியோடு நிற்கவில்லை. இதோ அது தீட்டியிருக்கிற தலையங்கத்தின் அடுத்த வாக்கியங்கள் :—

"கை மணி அடிக்காமல் (துதி பாடாமல்) சுய அறிவையும், சுதந்திர சிந்தனையையும் ராஜாஜி கொண்டிருக்கிறார். காங்கிரஸ் மேலிடத்திலிருந்து பாராட்டைப் பெறவேண்டுமானால், இவை இரண்டையும் அறவே விட்டுவிட வேண்டும்."

சுய அறிவு!

சுதந்திர சிந்தனை!

இவை இரண்டும் காங்கிரஸ் மேலிடத்திற்குப் பிடிக்காதவை!

என்ன பொருள் இதற்கு?

ராஜாஜி பிரிவினையை ஒப்புக்கொள்ளுகிறாரா, இல்லையா—அது வேறு விஷயம்!

வெள்ளையன் வெளியேறிய பிறகு நாடு விடுதலை பெற்ற நாடாகிவிட்டது—சுதந்திர வெள்ளம் கரை புரண்டோடுகிறது—ஆண்டான், அடிமை என்ற பேச்சுக்கே இப்போது இடமில்லை என்று நாள்தோறும் சொற்சிலம்பம் வீசுகிறவர்களைக்காண்கிறோம், இங்கே வருகிற "சுதந்திர சிந்தனை" என்பதை, "நாட்டை மீட்பதற்கான எண்ணம்" என்ற பொருளில் தவிர வேறெந்தப் பொருளில் கொள்ள முடியும்?

அந்த இதழில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின்மீது, தனது வெறுப்பைக் காட்டிக்கொள்ளும் முறையில் அட்டைப் படம் வெளியாகியிருக்கிறது! ஆசிரியராலேயே வரையப்பட்டது அது!

கேரளக் கல்விச் சட்டம் என்னும் பெண், சுப்ரீம் கோர்ட் என்னும், பெரிய—பைண்ட் செய்யப்பட்ட—புத்தகத்திலே வைத்து மூடப்படுகிறாள். அவளது தலையும், கால்களும் கரங்களும் புத்தகத்துக்கு வெளியே இருக்கின்றன. புத்தகத்தின்மேல் மத்திய உள்நாட்டு அமைச்சர் பண்டித வல்லப பந்த் ஏறி அமர்ந்து கொண்டு இருக்கிறார். அந்தப் பெண் (கேரளக் கல்விச் சட்டம்) மூச்சுத் திணறியவண்ணம் இருக்கிறாள்.

கேரளத்தை — கேரள அரசாங்கத்தால் செய்யப்பட்ட சட்டத்தை—மத்திய அரசாங்கம் நசுக்கிவருகிறது என்ற எண்ணம் தோன்றிடுகிற தென்றால், அந்த எண்ணம் எதிலே கொண்டுபோய்ச் சேர்க்கும், என்று அரசியல் யூகம் உள்ளோர் அனைவரும் அறிந்திட இயலும். "அகில இந்தியாக்கள் அறிந்திடவில்லையென்றால், அவர்கள், அதனை அறிந்திட—அத்தகு கருத்துக்களைத் தாங்கிக் கொள்ள மனமற்றவர்களாக இருக்கிறார்களென்பதைத் தவிர வேறென்ன பொருள்?

வடக்கு ஆளுகிறது, தெற்கு ஆளப்படுகிறது என்ற எண்ணம் எதிலே கொண்டுபோய்ச் சேர்க்கும் என்று நாமாக யூகிக்கக் கூடத் தேவையில்லை!

அந்த இதழின் மற்றொரு பகுதியில்—ஒரு கேள்விக்குத் தரப்பட்டிருக்கிற பதிலில்—ஜாடைமாடையாக விளக்கப்பட்டிருக்கிறது. இதோ அந்தக் கேள்வி:-

"நம்முடைய ஆட்சி மொழி (Official Language) இந்தி தான் என்று வட இந்தியர் சொல்லிக் கொள்ளுகிறார்களே, இந்த நிலையில், கேரளத்துக்கு வரும், வேறு மாநில அதிகாரிகள் மலையாள மொழியைக் கட்

'காசி'யில்

யாரும் போகலாம்! எல்லோரும் தொடலாம்!!-என்று முடிவு செய்து விட்டார்களாம். இதுவரை, வணக்காமுடிகளாக, வக்கிரமம் செய்து கொண்டிருந்த காசி விசுவநாதர் கோயில் நிர்வாகிகள் செய்திருக்கிற முடிவு, ஆச்சரிமாயுள்ளது. கடந்த சிலமாதங்கள்வரையில், தாழ்த்தப்பட்டோர், கோயிலுக்குள்ளேயே வரக் கூடாது என்று பிடிவாதம் செய்துவந்தவர்கள் அவர்கள். ஆனால் இப்போது, கோயிலுக்குள் மட்டுமல்ல, நேரே லிங்கத்தின் அருகிலும் போய் தொட்டுக் கும்பிடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்! கடந்த டிசம்பரில், பல ஆதித்திராவிடர்கள், சந்நிதிவரையில் போய், லிங்கத்தையும் தொட்டுக் கும்பிட்டுவிட்டு வந்தனராம். அதைக்காரணமாகக் காட்டி "இனிமேல். மூடிமறைக்க என்ன இருக்கிறது? இந்தளவுக்கு நிலைமை வளர்ந்துவிட்ட பிறகு எல்லோருக்தான் போய்க் கும்பிட்டுவிட்டுப் போங்களேன்," என்று அறிவித்துவிட்டார்கள், ஆலய நிர்வாகிகள். உண்மையில், இது ஒரு பெரிய புரட்சிதான். இங்கு எத்தனை கோயில்களுக்குள்ளிருக்கும் சந்நிதானத்துக்குள் நம்மாலேயேபோக முடிவதில்லை! 'குன்றக்குடி' போன்றோர் போனால்கூட வெளியே நின்றுதானே, தரிசித்துவரவேண்டியுள்ளது!!

டாயம் படிக்கவேண்டும் என்று சொல்லாதது ஏன்?"

இந்தக் கேள்விக்கு "செய்யலாம்" செய்யக் கூடும்" "அரசாங்கம் ஆலோசித்து வருகிறது" என்று ஏதாவது ஒரு பதிலைத் தந்திருக்கலாம்.

ஆனால் அந்த இதழ் தந்திருக்கும் பதில், "அகில இந்தியா"க்களின் ஒற்றுமைக் கூச்சலுக்கு தரப்பட்டிருக்கிற சம்மட்டியடியாக இருக்கிறது.

நம்மைப் பொறுத்த வரையில், கேரளத்தில் விடிவெள்ளி முளைத்து வருகிறது என்று தோன்றுகிறது! நமது கருத்துக்குக் கிடைத்திருக்கின்ற ஆதரவு கண்டு, அளவிடற்கரிய உற்சாகம் பிறக்கிறது! இதோ அந்த இதழ் தந்திருக்கும் பதில்:-

"மலையாளம் மட்டுமல்ல, எல்லாத் தென்னிந்திய மொழிகளும் வடவருடைய அடிமை மொழிகள். சாதாரண வெள்ளைக்காரன் யாராவது இந்திய மொழிகளைப் படிப்பதற்கு முயற்சித்ததுண்டா?"

தென்னிந்திய மொழிகள் — திராவிட மொழிகள்—அடிமை மொழிகள்!

அன்று வெள்ளையன் இந்திய மொழிகளைப் படித்ததில்லை — அதைப்போல் இன்று வடவர் திராவிட மொழிகளைப் படிப்பதில்லை.

இதே வாதத்தினால் மேலும் ஒருபடி சென்றால், அன்று வெள்ளையனே வெளியேறு என்றோம் — அதைப்போல் இன்று, வடவனே வெளியேறு என்கிறோம்!

இந்த முடிவு, அந்த இதழிலும், அதுபோன்று மற்ற இதழ்களிலும், அந்த மாநிலம் போன்று மற்ற இரு மாநிலங்களிலும், விரைவிலே தோன்றிடக்கூடும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க நியாயமில்லை.

எனவே, கேரளத்தில் விடிவெள்ளி முளைத்திருப்பதைக் காண்கிறோம் — ஆந்திரத்திலும், கன்னடத்திலும் அத்தகைய நிலை விரைவில் தோன்றிடாமலா போகும்?

★

தென்றல்

—[பெருவளப்பூர்ப் பெருவழுதி]—

அன்று கல்லூரி விடுமுறை நாள். விடுமுறை என்றாலே கல்லூரி மாணவர்கள் கண நேரங்கூட இல்லத்தில் இருக்கமாட்டார்கள். அதற்கு நான் மட்டும் விதிவிலக்கா? 'மாணவர் இல்லத்'திலிருந்து கிளம்பினேன் என் மனம் விழைந்த இடத்திற்கு. உந்து வண்டி'யை எடுத்துக் கடிது சென்றேன் காவிரியை நோக்கி

வழிதோறும் என் விழி நோக்கிய காட்சிகள் கணக்கிலடங்கா; முதுகெலும்பு ஒடிய மூட்டை தூக்கும் முத்தனையும், கை வண்டி இழுக்கும் கருப்பனையும், நில ஊர்தியில் (காரில்) உல்லாசமாகச் செல்லும் உலகப்பரையும், பார்த்தவாறே சென்றேன். இன்பமும் துன்பமும் இரு வீரர்களாக எழுந்து என் இதயத்தைப் பதம் பார்த்துவிட்டன.

'சோழ நாடு சோறுடைத்து' என்று கூறுவதுபோன்ற ஒலியுடன் துள்ளி ஓடும் காவிரியை அடைந்தேன். காவிரியின் கரை மருங்கே உள்ள ஒரு மரத்தடியில் வண்டியை நிறுத்திய எனக்கு மகிழ்வு இல்லை. காரணம்: என் அன்பிற்குரியவள் 'தென்றல்' இன்னும் அங்கு வரவில்லை என்பதை அப்போதுதான் நான் அறியலுற்றேன்.

அன்று பங்குனித் திங்கள் கடைசி நாள். இன்பமும் துன்பமும் போர்புரியும் போர்க்களமாக அமைந்த என் மனம் அன்று சித்திரை முதல் நாள் என்று எண்ணியே அங்கு சென்றது. வடக்கிலிருந்து வரும் 'வாடை' என்ற வம்புக்காரி என்னை வஞ்சனையால் அழைத்த போதுதான் உண்மையை உணரலுற்றேன்.

பத்து மாத காலமாக நான் பட்ட பாடு போதாதென்று இன்றுமா எனக்கு இன்னல்! ஆம்! வைகாசியின் முடிவிலே என்னைத் தன்னந்தனியனாக்கிச் சென்றால் என் அன்பிற்குரியவள் 'தென்றல்' அந்நாள் முதற்கொண்டு இன்றுள் ஈருக அவளின்றி நான் அடைந்த துன்பம், விரிப்பின் நீளும்; சுருக்கின் மிஞ்சும்.

இளையவள் போன மறுநாளே முதுமை (முதுவேனில்) வந்திட்டாள். தொல்லைபல எல்லையின்றித் தொடர்ந்தாற்போல்—ஆனி, ஆடி ஆகிய இரு திங்களில் கொடுத்திட்டாள். பின், 'கார்' என்ற 'காரிகை' வந்து, வெளியில் கால் எடுத்து வைக்கமுடியாக் கடுந் துயரம் தந்திட்டாள். 'குளிரோ' என் உடலை உள்ளபடி பதம் பார்த்தாள். அது மட்டுமா? 'முன் பனி' 'முன் பனி' என இருவர் வந்து இடுக்கண் பல தொடுத்தனர்.

'வாடை'யைப் பார்க்க மனமில்லாது, பளிங்கெனப் பள்ளத்தை நோக்கும் காவிரியின் வெள்ளத்தைப் பார்த்தவாறு இருந்தேன். அப்போது, என் கண்கள் இரு கயல்களை நீரிலே நோக்கின. ஒரு வேளை நம் கண்களோ என எண்ணினேன், பின், நாமென்ன கயல்விழிக் காரிகையோ என்று என் எண்ணத்தை மாற்றி நீரிலே நீந்திக்கொண்டிருந்த கயல்களைக் கண்ணுற்றேன். சிறு மீனைப் பெரு மீன் ஒன்று பிடித்து அதன் உயிர் துடிக்க, உண்ணுவதைக் கண்ட

நான் கலங்கினேன். உலக மக்களின் வாழ்வும் இப்படியேதான் உள்ளது என்று எண்ணும்போது கண்ணீர்த் துளிகள் என்னை அறியாமல் கீழே விழுந்தன. அப்போது 'வாடை'யானவள் வலிவுடன் என்மீது சாய்ந்து, கேசங்கள் சிலிர்க்கும்படி செய்துவிட்டு, சின்னநகை ஒன்று காட்டி, நாணிக் கோணி நடையைக்கட்டிவிட்டாள். நாலிலமே எனக்குக் கிட்டியது போன்றதொரு எண்ணம் அப்போது, ஏன்? யாருக்காக இதுவரையும் காத்துக்கிடந்தேனோ அவள்தான் அப்போது வந்துகொண்டிருந்தாள். ஆம், 'தென்றல்'தான்.

'செந்தாமரை விரியதே மாங்கொழுந்தொழுக' பொலிவுறும், இளவேனிலாகும். அந்த இளவேனிலிலே என் இதயம் கவர்ந்தவள் வந்தாளென்றால், எனக்கு இன்பமில்லையா!

அசைந்தாடிய அவள் 'அத்தான் எனச் சொல்லி, தன் அன்பைக் காட்ட என்னை அணைத்துக்கொண்டாள். அவள் அணைப்பில்தான் எத்தனை இன்பம்! 'குளி'ராலும் பனி'யாலும் காலத்தை கடத்திய நான் அன்று தென்றலின் அணைப்பிலே கட்டுண்டேன். கணநேரம் எல்லையே மறந்து இன்பபுரிக்குச் சென்றேன். அப்போது, குயில் கூவிற்று! மயில் ஆடியது! மான் ஓடியது! என் 'தென்றலி'ன் வருகையால் உயிர்கள் எத்துணை உவகை உறுகின்றன பாருங்கள்!

அவள் அணைப்பில் அரை நாழிகை இருந்துவிட்டுப் பின் பேசலுற்றேன். "தென்றலே! தேனினும் "இனிய நலம் தருபவளே! நின் பிறப்பிடமாகிய பொதிகைமலை எவ்வாறு இருக்கிறது? மதுரைக்குச் சென்றிருப்பாயே. பாண்டியனின் அரண்மனையைப் பார்த்தாயா? அங்கு, புலவர் பலருக்குப் புன்முறுவல் காட்டி இன்சொல் பல ஏற்றிருப்பாய். எல்லோரும் நலன்தானே" என்று கேட்டேன்.

ஆண்டிலே இரு திங்களே உம்மைச் சந்திக்க எனக்கு வாய்ப்புண்டு. அந்த நாட்களையும் வீணாகப் பேசிக் கழிக்காது, என அணைப்பிலே இருந்து ஆனந்தியுங்கள்" என்று கூறாமல் கூறி, மரத்திலிருந்த மாங்கனி ஒன்றை மண்டையிலே பறித்து போட்டுவிட்டாள். கனியை எடுத்தேன் உண்ண, எப்படி உண்ணுவது? 'தென்றல்'தான் என்னை விடவே மாட்டேன் என்கிறாளே.

ஞாயிறு அப்போது நாங்கள் இருவரும் இணைந்திருப்பதைப பார்த்துவிட்டு, மேலும் பார்க்க நாணி, நடையைக் கட்டிவிட்டான்.

மாணவர் இல்லத்தில் இரவினில் நாங்கள் இல்லை என்றால், காப்பாளர் கடிந்துகொள்வார் எனச் சொல்லி 'தென்றலி'டமிருந்து விடைபெற விழைந்தேன். விட்டால்தானே அவள். நானும் வருவேன் என்றாள். ஒப்பிவிட்டேன், வண்டியை எடுத்து வலுவாக மிதித்து, 'தென்றல்' பின்னே இருந்து என்னைத் தழுவிவர வந்து சேர்ந்தேன். அறையிலே புகும் வேளை, அவள் என்னைவிட்டுப் பிரிந்துவிட்டாள்.

மறு நாள் மாலை அறைக்கே வந்துவிட்டாள் அழைப்பதற்கு என்னை. சென்றேன் 'தென்ற'லின் மென்மையை அறிந்தவாறே.

சோலைதனில் மாலையிலே 'தென்றலு'டன் பேசலுற்றேன். "தென்னகத்துத் தீங்கரும்பே" என்றேன். அவளோ விழித்தாள்.

ஆம், தெவிட்டாத தென்னமுது என் 'தென்றல்' இதோ படி...! ஆங்கில அறிவுலகமேதை, நாடகத் தந்தை, கவிஞர் ஷேக்ஸ்பியர்தான் உன்னை அவ்வாறு அழைக்கிறார்.

"மலையத் தோங்கிய மங்கையே! மதுரையில் வளர்ந்தவளே! மங்காத் தமிழ்ப் புலவர் நாவில் பொருந்தியவளே" என்றேன். புரியாதவள்போல், பொலபொலவெனப் பூக்கொட்டி, தன் புன்னகையைக் காட்டிவிட்டாள்.

"உண்மையைத்தான் உரைக்கின்றேன். அவ்வாறு உன்னை உயர்த்திப் பேசியவர் யார் தெரியுமா? சிலம்பு செய்த இளங்கோ. இப்போது புரிகிறதா?" என அவள் அணைப்பிலே ஆழ்ந்து கிடந்தேன்.

என் 'தென்னவளை'ப் பற்றி பாடாத புலவர்; எழுதாத ஏடு இவ்வுலகினிலே இல்லை. என்று சொல்வேனேயானால், அது மிகையாகாதன்றோ!

அன்றொரு நாள்! அன்பிற்குரியவளாம், ஆசைக்கோர் பாசமாம், என் தங்கை இராசாத்தியிடம் உரை நிகழ்த்தும் நேரம். ஓடோடி வந்தாள் 'தென்றல்' இருவரும் பேசுவதைக்கண்டு, சினம் கொண்டு, சிரமீது சின்னக் கிளை ஒன்றைப் போட்டுவிட்டாள், தற்காலத்து நம்பிக்கையற்ற நங்கையர்போல். அவ்வளவு அன்பு அவளுக்கு!

ஊடலுக்குப்பின் கூடல்தானே! சிறிது நேரத்தில், தன் மென்மைக்குவந்து, என்மீது சாய்ந்தாள். அப்படியே அணைத்து முத்தமிடப் போனேன். கையிலே கிட்டியது ஒரு கனிதானே ஒழிய; அவள் அல்ல!

ஒரு நாள் மாலை நேரத்தே, சோலைப்புறத்தே, மக்கள் இன்பம்

தவறுகள் பல செய்ததாகக் கருதப்படுபவரும், டில்லியே மிரளுமளவுக்குக் காரியங்களைச் செய்தவருமான முந்திராவைக் கைது செய்து காவலில் வைத்தார்களல்லவா? ஆளும் கட்சியான காங்கிரசுக்கு, கடந்த பொதுத்தேர்தலின்போது ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கினாராம் அவர். சிறுமீன் போட்டுப் பெருமீன் இழுக்கும் முந்திராக்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் 'பாரத பூமியில்'. அவர் ஒரு காங்கிரஸ் அபிமானி மட்டுமல்லவாம், சிறந்த வைதீகராம். பூஜை, நேம நிஷ்டைகள் எதுவும் செய்யாமல் தனது தினசரி வேலைகளை அவர் துவக்குவதில்லையாம், சிறையில், அதற்கு வசதியில்லையென வருத்தம் தெரிவித்திருக்கிறார். சிரிப்பு வருகிறதா!!

*

"இதென்ன அதிசயம்! காங்கிரசின் போர்வையில் பணக்காரர்கள் கொட்டமடிப்பது மட்டுமா? காங்கிரஸ் முதன் மந்திரி ஒருவர் எவ்வளவோ ஊழல்கள் செய்திருக்கிறார். அவர் செத்தபோது, ஒரு கோடி ரூபாய் சொத்து இருந்ததாம். எங்கேயிருந்து கிடைத்தது அந்தச் சொத்து?", என்று கேட்டிருக்கிறார், டில்லிமேல்சபையில் பூபேஷ் குப்தா என்பவர். எத்தனையோ பேர், காங்கிரசாட்சியில், தன்னுடைய சட்டைப் பைகளை நிரப்பிக் கொள்வதாகப் பலமாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்.

துய்த்தவண்ணம் இருந்தனர். "அவர்கள் எல்லாம் என்ன பேசுவார்கள் அத்தான்" என்று கேட்பதுபோன்று, சோலைதனில் 'சோ'வென ஒலியுடன் கேட்டாள். "என் தென்றலைப்பற்றித்தான் தெள்ளு தமிழ் தெம்மாங்குடன் நடை போடுகிறது" என்றேன். அவளோ, இல்லை என்று சொல்ல சொல் எடுத்தாள்.

"ஆமாம் கண்ணே. உன்னைப் பற்றித்தான் பேசுவர். ஏன் பேச மாட்டார்கள். உன்னுடைய வருகையால் இன்பம் காணும் இன்னுயிர்கள் எத்தனை என்பதை எண்ணிப் பார்! அதோ இருவர்! இன்பம் பொங்க, இதயத்தோடு இதயம் இன்னுரை ஆற்றுகின்றனரே; அவர்கள் யார்? காலை முதற்கொண்டு மாலைவரைக்கும் உழைப் புழைத்து சிறிது நேரம் நின்னைக் கண்டு இன்பம் காணும் இன்னுயிர்களன்றோ' பகல் முழுதும் பகலவனின் ஒளியையும் பாராது பாடுபடும் பாட்டாளியின் துயரத்தை நின் மென்மைப் பார்வையால் பகலவன் கண்ட பனிபோல் செய்கிருயே. அது மட்டுமா. உள்ளே இருக்க மனமின்றி உண்ட உடனே உன்னைக் காண வெளிவந்து, "அப்பாடா, தென்றலின் பார்வை பட்டாலே போதும், பறந்தோடிவிடுகிறதே களைப்பு" என்று கூறி மகிழும் கிராம மக்கள் எத்தனைபேர்! இவ்வளவிற்கும் உரித்தான உன்னை நான் காதலிப்பதில் இன்பம் காண்கின்றேன்."

"இப்படியெல்லாம் என்னைப் பற்றி பேசுவீரேயானல் போய்விடுவேன்" என்றுதானே கூறப் போகிருய். வேண்டாம், வேண்டாம். நீ போய்விட்டால்...! நினைத்தாலே நெஞ்சம் நெருப்புண்ட பஞ்சாகிவிடும். மீண்டும உனைச் சந்திக்க இனனும் பத்து மாதம் பறந்தோட வேண்டுமே—எபபடி என்ஞல் நின் பிரிவைப் பொறுக்க முடியும்.

'எதையும் தாங்கும் இதயம் படைத்த உனக்கு இந்தப் பிரிவா பெரிது?" என்றுதானே கேட்கப் போகிருய். நான் மட்டுமல்ல நட்டமடைவது நின் பிரிவால்.

> நாம் யாரையும் அடக்கி ஆளமாட்டோம். அதே நேரத்தில் வேறுயாரும் நம்மை அடக்கியாளவும் அனுமதிக்கமாட்டோம்.
>
> —சன்யாட்சென்.

இதோ, ஆங்கிலப் பேரறிஞர் பிரௌனிங் வாடையின் கொடுமையையும் நினது இனிமையையும் நினைந்து, நெஞ்சுருகக் கூறுவதைக் கேட்கவில்லையா நீ! அது மட்டுமல்ல. உன்னுடைய வருகையை வழிமேல் விழிவைத்து காத்துக் கிடக்கிறேனே நான், அதுபோல் இன்னொரு ஆங்கில மேதை உன்னுடைய வருகையை எண்ணி, எண்ணி 'வாடை' வந்ததை அறிந்து, அவளுக்குப் பின் நீ வரத்தான் போகிருய்; இன்பம் தரத்தான் இருக்கிருய். நீ வரும் காலம் நெடிது இல்லை; நெருங்கி விட்டது என்றெல்லாம் எண்ணுவதாகக் கூறுகிருர் கவிஞர் ஷெல்லி.

நங்கையரிடத்து நறுமணம் உண்டென்று நல்லறிஞர் சொல்லிப் போந்தனர். அந்த முறையிலே நீ மலர் பல கண்டு, எங்கும் மணம் வீசி, மக்களின் மனதில் இடம் பெறுகிருய் என்று பலர் பேச நான் கேட்டிருக்கிறேன். உண்மைதானே அது. இல்லை என்று எவரால் சொல்ல முடியும்!

அன்று நான் கடைவீதியில் சென்று கொண்டிருந்தேன். அப்போது ஒரு கல்லூரி மாணவி செல்வதைக் கண்ட ஒரு மாணவன், அவளைத் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தான். அவனுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதுபோல், மாணவியின் மெல்லிய ஆடை அவன்மீது படும்படி செய்துவிட்டாய். அப்போது பார்க்கணுமே அவன் மனத்தை. பூரிப்பால், அவன் மனம் பொங்கலெனப் பொங்கிற்று. நீ ஏன் அப்படியெல்லாம் செய்கிருய்? எல்லோரையும் தொட்டுப் பழகும் உரிமை யார் கொடுத்தது உனக்கு. என்னைத்தானே சுட்டுகிருய். நான் அல்ல...! இளமை முதற்கொண்டு நீ வழக்கமாகச் செய்துவரும் பழக்கம்.

உன்னுடைய வருகையால் மாமரங்கள் மனம் இரங்கி கனிகள் பல இனிதாகத் தருகின்றன. மக்கள் உள்ளமெல்லாம் நீ இருக்கும் இரு மாதமும் இன்பத்தால் பொங்குகிறது. காணுமிடமெல்லாம் கண்ணுக்கினிய காட்சி! காதிற்கினிய கானம்! ஊர்தோறும் விழா! இல்லந்தோறும் இன்பம்! என்னென்று இயம்புவேன் நின் இனிதான செயலை. எழுதாத ஓவியம் நீ! பாடாத காவியம்! வாடாத மலர்! ஓடாத தேனுறு! ஒளியாத ஒய்யாரி! சிந்தனையைக் கிளறும் சிங்காரி! நின் அணைப்பிலேயே ஆண்டுதோறும் இருக்கலாம் என்ற எண்ணம். என் செய்வேன்? இரண்டே மாதம்! முடிந்தும் விட்டது. நாளை நீ போகப் போகிருய்! மறுநாள் வருவாள் முதுவேனில். முரடி அவள்! என்னென்ன இன்னல்கொடுப்பாளோ! நானறியேன், ஒன்று மட்டும் உறுதியுடன் மனதிலே போட்டு வை. இன்னும் பத்தாம் மாதத்தில் பார்க்க வந்துவிடு. வேண்டுகோளை நிறைவேற்றும் திறமை உனக்கு உண்டென்ற எண்ணத்தில் உன்னை விடுகிறேன். இன்றேல் விடமாட்டேன். இதுவே எனது இந்தாண்டுக் கடைசிச் சந்திப்பு! பொதிகையின்கண் சென்று இன்னும் பொலிவுற்று, அடுத்த ஆண்டு வரும்போது சந்தனம் கொண்டுவந்து என்மீது நின் கையாலே தடவ வேண்டும். இதுவே என் கட்டளை. மறந்து விடாதே; இன்னும் ஏன் என்னை இப்படி அணைக்கிருய். விடு. விட்டு விடு. விடைபெறுகிறேன். வணக்கம்! வாழ்க 'தென்றல்'!

கருத்து விளக்கம்

காலம், கனியத் துவங்கிவிட்டது! காய்ந்தோரெல்லாம், கவனிக்கும் கட்டம் ஏற்பட்டு வருகிறது!!

திராவிடநாடு எட்டாத கனி, எண்ணிப்பார்க்கவும் இலாயக்கற்ற ஒன்று, அதற்காகப் பாடுபடுபவர்களும் அரசியல்வாதிகளா, என்று ஏளனமும் கேலியும் கிளம்பிய வட்டாரங்களிலிருந்தெல்லாம், பெருமூச்சும் 'ஆமாமாம்' என்கிற குரலும், கேட்கத்துவங்கிவிட்டது.

டில்லியில், நேரு பேசுகிறார்! இங்கே, வட்டமிடும்போதும் சரி, சட்டசபையிலும் சரி அமைச்சர்கள் பேசிக்கொண்டேயிருக்கிறார்கள்!!

சென்ற கிழமை, 'இந்து' ஏட்டில், நீலகண்ட சாஸ்திரியார் எனும் பேராசிரியர், "இந்தியாவின் ஒற்றுமையை"ப்பற்றி ஒரு நீண்ட கட்டுரையே எழுதி, திராவிடநாடு கூடாது என வலியுறுத்த முயல்கிறார். அவருக்குப் பதில் தருவதுபோல, அதே 'இந்து'வில் இராமச்சந்திரன் என்பார், 'ஆசிரியருக்குக் கடிதம்' பகுதியில், தீட்டுகிறார். தமிழகத்தின் தொன்மைபற்றி. புகாத இடங்களிலெல்லாம், புகத் துவங்கிவிட்டது நம் கீதம்.

இச் சந்தர்ப்பத்தில், நிகழ்ச்சியொன்றைக் கவனமூட்ட விரும்புகிறோம். எட்டாண்டுகளுக்குமுன்!!

* * *

(1) **சந்திரபள்ளிபாண்டே** - அலாகாபாத் இந்தி சாகித்ய சம்மேளனத் தலைவர்.

(2) **காஞ்சனலதா சபர்மாலா** - லக்னௌ மகிள வித்யாலய பிரின்சிபால்.

(3) **பாபா ராகவதாஸ்** - ஐக்கிய மாகாண எம். எல், ஏ.

(4) **பண்டிட் சீதாராம் சதுர்வேதி** - காசி இந்துப் பல்கலைக் கழகம்.

(5) **பாலசந்திரா ஆப்டே** - சென்னை, தட்சிண பாரத இந்திச் சபை.

ஆகியோரடங்கிய, இந்தி நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று, தமிழகம் வந்தது. அக்குழு, காஞ்சிக்கு வந்து, நமது அலுவலகத்தில், சி. என். ஏ.யைச் சந்தித்தது. அந்த உரையாடல், நூல்வடிவில், திருச்சி திராவிடப்பண்ணையால் வெளியிடப்பட்டிருக்கிறது.

எனினும், திராவிடநாடு பற்றியும், இந்தி குறித்தும், ஏதேதோ புதுப்புதுக் கேள்விகள் கிளப்புவது போலப் பேசுவோருக்கு விளக்கமளிக்கும் எனக் கருதி, இங்கே வெளியிடுகிறோம். எட்டாண்டுகளுக்கு முன்பு! 11-10-50 அன்று நிகழ்ந்த சந்திப்பு இது!!

* * *

சதுர்வேதி:- எங்கள் தூதுகோஷ்டி அரசியல் சார்பற்றது. சமாதானம் நட்பு ஆகியவைகளைப் பலப்படுத்தும் நோக்கத்துடனேயே வந்திருக்கிறோம். தாங்கள் இந்தி மொழி பரவுதல் கூடாது என எதிர்ப்பதாகக் கேள்விப்பட்டோம். இந்தி—ஆரிய மொழி என்று தாங்கள் கூறுவதாகவும் அறிந்தோம். பல மொழிச் சேர்க்கையால் உருவான மொழியே இந்தியாகும். இதுவே பொது மொழியாக இருக்கும் நிலையிலிருப்பது என்று கருதுவதோடு, இந்தி பொது மொழியாக இருக்க அருகதையுள்ளதென்று திடமாக நம்புகிறோம், ஆனால் தாங்கள், அது கூடாது என எதிர்ப்பதாகவும், அதற்கு முக்கிய காரணமாக 'இந்தி ஆரிய மொழி' என்று கூறுவதாகவும் கேள்விப்பட்டோம். ஆகவே இது பற்றிய தங்கள் கருத்துக்களை அறிய விரும்புகிறோம்.

சி. என். ஏ:- இந்தி திணிக்கப்பட வேண்டாம் என்று கூறுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. இந்தியா, சுதந்திரம் அடைவதற்கு முன்னரே, நாங்கள் இந்தியை எதிர்த்திருக்கிறோம். கட்டாய இந்தி கூடாது என்று கிளர்ச்சி செய்திருக்கிறோம்.

தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்று இந்தியைப் புகுத்துபவர்கள் காரணம் சொல்கிறார்கள். அதைக் காட்டியே இராஜகோபாலாச்சாரியார், இந்தியைக்கொண்டு வந்தார். அப்போது நாங்கள் எதிர்த்தோம் — பலன் பெற்றோம். அதற்குள்ள காரணம், எங்கள் குழந்தைகள் தாய் மொழி தமிழ், அகில உலக மொழி ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகளைக் கற்க வேண்டிய கஷ்டத்துக்கு ஆளானார்கள்.

அதோடு, எங்கள் மொழி எல்லோரும் போற்றும் ஒரு சிறந்த மொழி. இலக்கிய வளமும், சிறந்த அழகும் வாய்ந்தது. இன்னொரு மொழி கட்டாயமாக எம்மீது திணிக்கப்பட்டால் தனிப் பெருமையுடைய எங்கள் தாய் மொழி தள்ளப்படும்.

இந்தி அழகுள்ளதல்ல, இலக்கிய வளங்கொண்டதல்ல என்று தங்கள் போன்றாரே ஒப்புக்கொண்டுள்ளீர்கள். ஆகவே

அத்தகைய ஒரு மொழி — எங்கள் மீது ஏன் சுமத்தப்பட வேண்டும்?

எங்கள் எதிர்ப்புக்கு அரசியல் ரீதியிலும் ஆட்சேபங்கள் உண்டு.

இந்தி, அரசாங்க மொழியாக வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள், அதாவது இப்போது ஆங்கிலத்திற்கு இருக்கும் இடம் இந்திக்கு இருக்கவேண்டுமென்று கருதுகிறீர்கள். இதை எங்களால் ஒப்ப முடியாது.

இந்தி தேவையென்றால், வேண்டுமென்பவர்கள் அதைக் கற்றுக்கொள்ள விரும்புவதில் எங்களுக்கு ஆட்சேபமில்லை, ஆனால் அது அரசாங்க மொழி என்று வலியுறுத்தப்படுவதில், வேறு அர்த்தம் தொனிக்கிறது.

இந்தியா ஒரே நாடு என்ற எண்ணத்திலேயே இந்திமொழி ஆதரவாளர்கள் அரசியல் மொழியாக வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

காஞ்சனலதா:- அப்படியென்றால் இந்தியா ஒரு நாடில்லையா?

சி. என். ஏ:- இல்லை சகோதரி! இந்தியா ஒரு நாடல்ல — ஒரு உபகண்டம்!! பல இன மக்கள் வாழும் ஒரு பரந்த நிலப்பரப்பு. இங்கே ஒரே ஆட்சி நிலவுவதென்பது முடியாது. அதே போல, ஒரே மொழி, அரசாங்க மொழியாவதும் இயலாது.

இந்த இடத்தில் உங்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். வியாபார விஷயங்களுக்கோ அல்லது வேறு எந்தவித தொடர்புக்காகவோ, இந்தி வேண்டுமென்று கருதுபவர்கள் இந்தியைத் தெரிந்துகொள்வதில் எங்களுக்கு ஆட்சேபமில்லை.

ஆனால், அது அரசாங்க மொழியென்று கூறப்பட்டு இந்த உபகண்டத்திலுள்ள எல்லா மக்களும் கற்றுக்கொள்வது அவசியம் என்று வலியுறுத்தப்படுவதை நாங்கள் ஒப்ப முடியாது, இந்தியா ஒரு நாடல்ல.

இந்த விஷயத்தில், அடிப்படையிலேயே நமக்குள் கருத்து வேற்றுமை இருக்கிறது.

சர்வேதி:- அது பற்றி எங்கள் தெளிவுக்காக, விளக்க முடியுமா? தாங்கள், திராவிடஸ்தான் கோருவதாகக் கேள்வியுற்றோம். அது சாத்யமாகுமா? இந்தியாவைக் கூறுபோட்டு இரண்டாக்கி பாக்கிஸ்தான் என்று ஒரு தனி நாட்டைச் சிருஷ்டித்ததால் எவ்வளவு கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறோம்! எவ்வளவு இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது! அகதிகள் பிரச்னை எவ்வளவு தொல்லையாக இருக்கிறது. பிரிவினையால், பொருளாதாரத் துறையில் நமதுநாடு எவ்வளவு சங்கடப்படுகிறது. இதையெல்லாம் கவனிக்கும்போது, தனி நாடாகப் போவதிலுள்ள கஷ்டங்கள் விளங்கவில்லையா? இந்தியாவை, ஆர்யாவர்த்தம் என்றும், சீக்கிஸ்தான் என்றும் திராவிடஸ்தான் என்றும் பிரிப்பதால், இப்போது நாம் பாகிஸ்தானைபிரித்ததால் ஆளான கஷ்ட நஷ்டங்கள் உண்டாகாதா?

சி. என். ஏ:- எங்கள் கோரிக்கை வேறுவிதமானது.பாகிஸ்தான், சீக்கிஸ்தான், போன்றதல்ல! ஏனெனில்

பாகிஸ்தான்—ஒரு புது சிருஷ்டி! சீக்கிஸ்தான் — ஒரு புதுக் கோரிக்கை! திராவிட நாடு — தனியாக இருந்த நாடு, தனியாக இருக்கும் நாடு!

பாண்டே:- அப்படியென்றால்?

சி. என். ஏ:- நாங்கள் கோரும் திராவிட நாடு பூகோள ரீதியிலும், சரித்திர ரீதியிலும் எப்போதும் தனியாகவே இருந்ததாகும். வட இந்தியாவைப் போன்றதல்ல. பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் வடக்கே இருந்திருக்கின்றன. சந்திரகுப்தன், அக்பர், அவுரங்கசீப் போன்றோருடைய சாம்ராஜ்யங்கள்வடக்கிலிருந்திருக்கின்றன! அப்போதும்நாங்கள் கூறும் திராவிட நாடு—தென்னாடு தனியாக, தனி அரசுடனேயே, இருந்ததாகும்.

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்து, இந்திய நாட்டைத் தங்கள் வசப்படுத்திய பின்னரே உருவாயிற்று 'இந்தியா'. நிர்வாக வசதிக்காக தென்னாடு இணைக்கப்பட்டு டெல்லி ஆட்சி ஏற்பட்டது.

அதற்கு முன்னதாக தென்னாடு—தக்காணம்—ஒரு தனிச் சுதந்தர நாடாகத்தான் இருந்தது!

சதுர்வேதி:- தாங்கள் தனிநாடு கோருவதன் நோக்கம் என்ன?

சி. என். ஏ:- எல்லா அதிகாரங்களும் எம்மிடமே இருக்க வேண்டும் என்பதுதான். இப்போது எதற்கெடுத்தாலும் டெல்லிக்குப் போக வேண்டியிருக்கிறது. அங்கில்லையில்லாமல், எங்களது வர்த்தகத்தை நாங்களே நடத்த உரிமையிருக்க வேண்டும். இதுபோன்ற எங்களது விவகாரங்களில் இன்னொருத்தர் தலையிட்டு இருக்கக்கூடாது. எல்லாம் எங்களாலேயே கவனித்துக்கொள்ளப்படவேண்டும்.

பாண்டே:- பொருளாதார ரீதியில் அது சாத்தியமா?

சி. என். ஏ:- சாத்யம்தான். எங்களை நாங்கள் ஆண்டுகொள்வதற்கான அத்துணை வசதிகளும் உள்ளன.

சதுர்வேதி:- அதாவது, திராவிடஸ்தான் பொருளாதார வசதி நிறைந்த தனி 'யூனிட்' என்று தெரிந்துகொண்டேன். அப்படித்தானே?

சி. என். ஏ:- ஆமாம்!

சதுர்வேதி:- அப்படியிருந்தாலும், இதுபற்றிய எனது சொந்த அபிப்பிராயத்தைக்கூற விரும்புகிறேன். இரயில்வே, தபால் போக்குவரத்து போன்ற சில முக்கிய சாதனங்கள் பொதுவாக இருப்பதுதானே நல்லது. நான் பிரயாகையில் புறப்பட்டு, கன்னியாகுமரிக்கு வருகிறேன். பொதுவாக, ஒரே நிர்வாகத்திலிருந்தால், நான் நேராக வர முடியும். அப்படியில்லையென்றால், ஒவ்வொரு பிரதேசத்தில் நுழையும்போதும், இறங்கி 'பாஸ்போர்ட்' போன்றவைகளைக் காண்பித்துவிட்டு,

---

திருத்தம்

23-2-58ல் வெளிவந்த "திராவிட நாடு" இதழில் 15-ம் பக்கத்தில் உள்ள விளம்பரத்தில் 'உதய சூரியன்' விலை 1-25 என்று இருப்பதை **1-50** என்று திருத்திப் படிக்கவும்.

செல்லவேண்டும். இதுபோன்ற கஷ்டங்கள் தபால் போக்குவரத்திலும் ஏற்படும். இது, ஒரே நிர்வாகத்திலிருந்தால் ஏற்படாதல்லவா?

சி. என். ஏ:- உண்மைதான்! ஆனால், ஜெர்மனியிலிருந்து பிரான்ஸ், பிரான்சிலிருந்து இத்தாலி என்று செல்லும்போது, இறங்கி 'பாஸ்போர்ட்' காட்ட வேண்டியிருக்கிறதேயென்கிற கஷ்டத்திற்காக, ஐரோப்பிய மக்கள் எல்லாவற்றையும் ஒரே நிர்வாகத்தில் கொண்டுவர வேண்டும் என்று விரும்புகிறார்கள்? பல நன்மைகளை நினைத்து தனிநாடு வேண்டுமெனக் கேட்டால் சில்லரைச் சங்கடங்களை ஏற்கத்தானே வேண்டும்!

காஞ்சனலதா:- ஒரே உலகம் ஏற்பட வேண்டும், உலகிற்கே ஒரு பொதுப்பார்லிமெண்டு ஏற்பட வேண்டும் என்றெல்லாம் பேசப்படுகிற இந்தக் காலத்தில் 'தனியாகப் போகிறேன்' என்று கூறலாமா? ஒற்றுமையைக் குலைக்கலாமா? ஒரு குடும்பத்தில் வசிக்கும் இரு சகோதரர்களல்லவா நாம்?

சி. என். ஏ:- தங்கள் உவமானம் தவறு எனக்கூற வருந்துகிறேன். நாம் ஒரே குடும்பத்தில் வசிக்கும் சகோதரர்களல்ல! ஒரே வீட்டில் குடியிருக்கும் இரு நண்பர்கள்! அதிலும் அழகான தனி வீடு இருக்கும்போது, கட்டாயப்படுத்தி ஒரே வீட்டில் வைக்கப்பட்டிருக்கும் நண்பர்கள்!

உலக ஐக்கியம் பற்றிக் கூறினீர்கள், நாங்கள் தனி நாடாகப் பிரிவதால், உலகத்தோடு துண்டித்துக்கொள்ள மாட்டோம். உலக விவகாரங்களில் அக்கரை காட்டுவோம். வெளிநாட்டு விஷயங்களில் இந்தியா முழுமையுள்ள பிறருடைய கருத்து எப்படிச் செல்கிறதோ, அதோடு ஒன்றியே நாங்களும் இருப்போம்.

சதுர்வேதி:- அதாவது, வெளிநாட்டு விவகாரங்களில், பொதுவாக இருந்து, இந்திய ஆட்சியினர் எடுக்கும் நடவடிக்கைகளோடு ஒத்துழைப்பீர்கள்.

காஞ்சனலதா:- அது எப்படி இயலும்?

சி. என். ஏ:- முடியும்! இப்போது உலக வியவகாரங்களைக் கவனித்துக்கொள்ள ஐக்கிய நாடுகள் சபையில்லையா. அதைப்போல இந்திய உபகண்ட முழுவதுக்கும், நாம் ஒரு சபையை ஏற்படுத்திக்கொண்டு, வெளிநாட்டு வியவகாரங்கள்பற்றிய பொதுக் கொள்கையை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

பாண்டே:- ஆந்திரம், கேரளம், கர்னாடகம், தமிழகம் ஆகியவைகள் திராவிடஸ்தானில் அடங்கியிருக்கவேண்டும் என்று கூறுகிறீர்கள். அது எப்படி?

சி. என். ஏ:- அந்தப் பிரதேசங்களில் வாழ்வோரெல்லாம் இனவாரியாகப் பார்த்தால் (Ethnically) திராவிடர்கள்.

ஆப்டே:- அப்படியென்றால் மகாராஷ்டிரம்? அங்கும் திராவிடர்கள் இருக்கிறார்கள்-பஞ்ச-திராடர் என்று கூறப்படுகிறார்கள்.

சி. என். ஏ:- ஆமாம்! அவர்களே, விரும்பினால் தனிநாடு அமைத்துக்கொள்ள வேண்டியதுதான்.

காஞ்சனலதா:- வங்காளம்?

சி. என். ஏ:- அவர்கள் விரும்பினால்!

காஞ்சனலதா:- இப்படியே பிரிந்து கொண்டே போனால்......?

சி. என். ஏ:- ஏன்? விதர்ப்பம் போன்று 42 ராஜ்யங்களிருந்திருக்கின்றனவே!

ராகவதாஸ்:- அது சரி. மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டுமெனக் கூறப்படுகிறதே!

சி. என். ஏ:- அது, நிர்வாகம் சுலபமாக இருப்பதற்குத்தான். நாங்கள் கூறும் வகையில் அல்ல!

ராகவதாஸ்:- தங்கள் திராவிடஸ்தானில் ஆந்திரம், கேரளம், கர்னாடகம் ஆகியவைகளின் பொதுமொழி என்ன?

சி. என். ஏ:- ஆந்திரத்தில் தெலுங்கு, கர்னாடகத்தில் கன்னடம், கேரளத்தில் மலையாளம் முறையே அவர்கள் சொந்த மொழியாக இருக்கும். கூட்டு ஆட்சிமொழியாகவும் சர்வதேச மொழியாகவும் (Federal and International) ஆங்கிலம் இருக்கலாம்.

சதுர்வேதி:- பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் பிரச்னைப்பற்றிய தங்கள் கருத்தென்ன?

சி. என். ஏ:- இங்குள்ள பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் பிரச்னை வேறு. வடநாட்டிலுள்ள இந்து முஸ்லீம் விஷயம் வேறு. பார்ப்பனர் தங்களை உயர்ந்தவர்களெனக் கருதுகிறார்கள். சமுதாயத்தில் அவர்கள் செல்வாக்கு அதிகம். ஆகவே, அரசியலிலும், பொருளாதாரத்திலும் அவர்களுக்கே செல்வாக்கிருக்கிறது!

சதுர்வேதி:- இந்தப் பிரச்னை தீரவழியில்லையா?

சி. என். ஏ:- இன்னும் ஐந்தாண்டுகளில் தீர்ந்துவிடலாம்.

காஞ்ச:- அதெப்படி, அவ்வளவு சரியாகச் சொல்கிறீர்கள்!

சி. என். ஏ:- சகோதரி! அது எங்கள் ஆசையைக் காட்டுகிறது. இப்போதே முக்கிய பார்ப்பனத் தலைவர்கள் இப்பிரச்னை முடிவு கட்டப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

ராகவதாஸ்:- திராவிட நாட்டில் பார்ப்பனர்கள் நிலையென்ன?

சி. என். ஏ:- மனித உரிமையோடு வாழ்வார்கள். அவர்களை விரட்டுவதல்ல எங்கள் நோக்கம்.

பாண்டே:- பார்ப்பனத் தலைவர்கள் இங்குள்ள இந்தப் பிரச்னையைத் தீர்க்க முயலவில்லையா?

சி. என்.ஏ:- முயன்றிருந்தால் பிரச்னை வெகு சீக்கிரம் முடிந்திருக்கும். உதாரணத்துக்குச் சொல்லுகிறேன். இந்த 1950-ல் கூட, எங்களால், பார்ப்பனர் வசிக்கும் அக்கிரகாரத்தில் ஒரு வீடு வாங்க முடியாது. அதுமட்டுமல்ல, கோயிலிருக்கிறது. அங்கு எங்களால் பூஜை முதலாய காரியங்களை 'அவர்கள்' மூலம்தான் செய்ய வேண்டியிருக்கிறது. எங்களால் செய்ய முடிவதில்லை! அதேபோலத்தான், எங்கள் சடங்குகளும்-

காஞ்சனலதா:- ஐரோப்பாவில் கூட

> நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால், உன்னுடைய கால்களால் நடந்து போ. மற்றவர்களை நம்பி சோம்பி உட்கார்ந்திராதே.
>
> —நீட்ஷே.

மதக் குருமார் இருக்கத்தான் இருக்கிறார்கள்!

சி. என். ஏ:- அங்கு யாவரும் மத குருவாக வரலாம். அதேபோல இங்கு நான் விரும்பினால், அப்துல் லத்தீப் ஆகிவிடலாம்; ஆனால் அனந்தாச்சாரி ஆக முடியாது — எவ்வளவு வேத சாஸ்திரங்களைக் கற்றாலும், இங்கு நான் புரோகிதராக முடியாது!

காஞ்சனலதா:- உண்மைதான்— இதே நிலைதான் வடநாட்டிலும் இருக்கிறது.

சி. என். ஏ. :- நீங்கள் அதை உணரவில்லை.

ராகவதாஸ் :- தனிப்பட்ட பிராமணர்கள் இந்தவிஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லையா?

சி. என். ஏ. :- எடுத்துக்கொண்டார்கள். அது அவர்களுடனேயே நின்றுவிட்டது. உதாரணமாக ராஜகோபாலாச்சாரி போன்றவர்கள்—தங்களைப் பொறுத்தவரையில் சீர்திருத்தவாதிகள் தான். ஆனால் அவர்கள் சீர்திருத்தம் அவர்களுடனேயே நின்றுவிட்டது — தங்களைச் சேர்ந்தோரையும், தங்களைப் போல ஆக்கத் தவறிவிட்டார்கள்.

சதுர்வேதி :- மனிதாபிமானம் நிறைந்தோர் இக்கொடுமைகள் ஒழியவேண்டும் என்றே விரும்புவர். சமுதாய நீதி கிடைக்க வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது. இதற்கு மகாத்மா காந்தியின் தத்துவமே போதுமே! பிரிவினையா கேட்கவேண்டும்?

சி. என். ஏ. :- காந்தியார், நல்ல தத்துவம் தந்தார். ஆனால் இங்குள்ளோர் தங்களுக்கேற்ற வகையில் அதைத் திரித்துக் கொண்டனரே!

காந்தியார் 'ராம் ராஜ்யமாக' நாடு இருக்கவேண்டும் என்று நல்ல நாடாக அமையவேண்டும் என்ற அர்த்தத்தில் சொன்னார். ஆனால் அதைப் பரப்பும் வசதி கொண்டவர்களோ, 'ராம் ராஜ்யம்' என்றால்—இந்து ராஜ்யம் — அதாவது வருணாசிரம தர்மம் இருக்கவேண்டும், நாலு சாதிகள் இருக்கவேண்டும் என்றல்லவா திரித்துப் பேசுகிறார்கள்!

சதுர்வேதி :- உண்மைதான்.

சி. என். ஏ. :- காந்தியார் தங்கத்தைத் தந்தார். ஆனால் அதை தங்கள் இஷ்டத்திற் கேற்றவாறு நகைகளாகச் செய்து கொண்டனர்—அவரது சகாக்கள். ஆனால் இங்குள்ளோரோ அதைக்கொண்டு விலங்கைச் செய்து எங்கள் கைகளில் பூட்டுகிறார்கள்!

மதுரை மாவட்ட **தி. மு. க. 3-வது மாநாடு**

மார்ச் 8, 9-3-58-ஆம் (சனி ஞாயிறு) நாட்களில்

பழனி—மொய்தீன்பிச்சை பந்தல்

தாளமுத்து அரங்கில் நடைபெறும்.

தலைவர்: **நாஞ்சில் கி. மனோகரன்** எம். ஏ.

திறப்பாளர்: **புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்**

இருநாட்களிலும் இசைமுரசு **நாகூர் அனீபாவின்** இன்னிசை விருந்து நடைபெறும்.

இருநாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:— ரூ. 5, 3, 2, பெண்களுக்கு அணா 8

எஸ். முத்து, வ. கு. தலைவர்.
எஸ். எஸ். இராசேந்திரன், பொருளாளர்.
கா. வெங்கடாசலம், பா. சீனி, தொண்டர்ப்படைத் தலைவர்கள்.

பி. எஸ். சேக்,
தா. ஆவுடையப்பன்,
செயலாளர்கள்.

...புரம், ... திருவத்... தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
...ரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.